யாழ்
# தினக்குரல்
தினக்குரல்
THINAKKURAL
AN INDEPENDENT DAILY VOICE IN TAMIL
Registered in the Department of Posts of Sri Lanka under No QD/149/NEWS/2021 www.thinakkural.lk yarlthinakkural@gmail.com
ஓசை : 020 குரல் : 270 வியாழக்கிழமை 09 டிசம்பர் Thursday 09th December 2021. Post Box: 30 Phone: 021-7388301 Fax:021-7388304 விலை 30/= பக்கங்கள் : 12

## நோர்வே தூதுவருடன் கூட்டமைப்பு சந்திப்பு

நோர்வேயின் இலங்கைக்கான தூதுவர் டிரைன் ஜொரன்லி எஸ்கெடல் மற்றும் துணைத் தூதுவர் ஹில்டே பேர்க் ஹான்சன் ஆகியோரை தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் நேற்று சந்தித்துப் பேசினர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான » பக்கம் 02

## கொரோனாவால் மேலும் 28 பேர் பலி

இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி பாதிக்கப்பட்ட மேலும் 28 பேர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உயிரிழந்ததாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

அதன்படி கொரோனா தொற்றினால் » பக்கம் 02

# இந்தியாவின் முப்படைத் தலைமைத் தளபதி பலி



IMAGE: ANI REPUBLICWORLD

### -தமிழ்நாட்டில் ஹெலிகொப்டர் விபத்தில் சிக்கியது
### -மனைவி உட்பட மேலும் 13 பேர் உயிரிழப்பு

தமிழ்நாடு, நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே நடந்த ஹெலிகொப்டர் விபத்தில் அதில் பயணம் செய்த முப்படைகளின் தலைமை தளபதி பிபின் ராவத் மற்றும் அவருடைய மனைவி உட்பட 13 பேர் உயிரிழந்த சம்பவம் இந்தியாவை பெரும் சோகத்தில் ஆழ்த்தியிருக்கிறது.

கோவை சூலூரிலிருந்து குன்னூர் இராணுவ பயிற்சி பள்ளிக்கு சென்றபோதே இந்த விபத்து காட்டேரி எனும் அடர்ந்த காட்டு பகுதிக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது; நீலகிரி மாவட்டத்தில் » பக்கம் 02

## உணவு, மருந்துகள், எரிபொருள் இல்லாது பாதிக்கப்படும் நிலை

### -ஹர்ஷ டி சில்வா எம்.பி. எச்சரிக்கிறார்



பா. கிருபாகரன் - ந. ஜெயகாந்தன்

இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமைக்கு தீர்வு காண தவறினால், நாட்டின் கூகுள் வரைபடம் கூட நிறுத்தப்படும் நிலைமை ஏற்படும் என்று எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷடி சில்வா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கைத்தொழில், வர்த்தக அமைச்சுகள் மற்றும் நான்கு இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் கையிருப்பில் உள்ள திரவ » பக்கம் 02

## பௌத்த அடிப்படைவாதமே இலங்கையில் பரவி வருகின்றது

### மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. சாணக்கியன்

பா. கிருபாகரன் - ந. ஜெயகாந்தன்



பலவீனம் , கவனயீனம் காரணமாக அடிப்படைவாதமும், பயங்கரவாதமும் நாடுகளுக்கு இடையில் பரவுவதாக ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். இலங்கையிலும் அதுவே இடம்பெறுகின்றது . பௌத்த அடிப்படைவாதமே இலங்கையிலும்

பரவிக் கொண்டிருக்கின்றது. ஜனாதிபதி ஊடக மையத்தின் மூலமாகவே கீழ்த்தரமான பதிவுகள் பதியப்படும் நிலைமை நாட்டிற்கு ஏற்பட்டுள்ளது என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. யான இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற வர்த்தக அமைச்சு, » பக்கம் 02

## வல்வெட்டித்துறை நகர சபைக்கு விரைவில் புதிய தலைவர்

வல்வெட்டித்துறை நகர சபைக்கு புதிய தலைவர் தெரிவு எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும் என வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பட்ரிக் ரஞ்சன் அறிவித்துள்ளார். இச்சபையின் வரவு செலவு திட்டம் கடந்த நவம்பர் மாதம் இரு முறை சமர்ப்பிக்கப்பட்ட போது, இரு முறையும் தோற்கடிக்கப்பட்டது.

இதனையடுத்தே சபைக்கான புதிய தலைவர் தெரிவு செய்யப்பட்வுள்ளார். வல்வெட்டித்துறை நகர சபைக்கான தேர்தல் கடந்த 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற பின்னர் இதுவரை முறையே இரு தலைவர்கள் பணியாற்றி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையில் ஆரம்பத்தில் இருந்து வந்த

இச்சபை, சில மாதங்களுக்கு முன்னர் சுயேட்சைக் குழுவின் ஆளுகைக்கு மாறியிருந்தமை குறிப்பிடத்தக்கது .(ச-44)

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அனுஷ்டித்த 10 பேருக்கும் பிணை

### -வாழைச்சேனை நீதிவான் நீதிமன்று உத்தரவு




முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வினை நடாத்தினார்கள் என கடந்த ஆண்டு மட்டக்களப்பு கிரான் பகுதியில் கைது செய்யப்பட்ட 10 பேரும் பிணையில் நேற்று புதன்கிழமை விடுதலை செய்யப்பட்டனர்.

2021 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் செய்வதற்கு எதிராக லவக்குமாருக்கு நீதிமன்ற தடை உத்தரவு பெறப்பட்ட » பக்கம் 02

## முன்னாள் போராளிகள் வீதிகளில் கையேந்தி யாசகம் பெறும் நிலை

### -தற்கொலை முயற்சிகளிலும் ஈடுபடும் நிலைமை



பா. கிருபாகரன் - ந. ஜெயகாந்தன்

உறுதியளித்ததுபோல் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் தவறியுள்ளதாகவும் பல முன்னாள் போராளிகள் வீதிகளில் கையேந்தி யாசகம் பெறும் நிலை காணப்படுவதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட எம்.பி. செல்வம் அடைக்கலநாதன் குற்றம்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற கைத்தொழில் அமைச்சு » பக்கம் 02


## 'நாட்டில் இனிமேல் மின் தடை வராது'



இனிவரும் காலங்களில் எந்த விதத்திலும் அவசர மின் விநியோக தடையேற்படாது எனவும் மக்கள் அச்சமடையத் தேவையில்லை எனவும் மின் சக்தி அமைச்சர் காமினி » பக்கம் 02

## ரயிலுடன் மோதுண்டு தந்தை,தாய்,மகன் பலி

### தற்கொலை செய்து கொண்டார்களா?



பதுளையில் இருந்து நேற்று புதன்கிழமை கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த உடரட்ட மெனிக்கே ரயிலில் மோதி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, தாய் மற்றும் அவர்களின் மகன் ஆகியோர் உயிரிழந்துள்ளதாக வட்டவளை பொலிஸார் » பக்கம் 02

## இரண்டு வாரங்களில் 458 வீடுகளில் வெடிப்பு

### எரிவாயு குண்டுகளை வீடுகளுக்கு அனுப்பினர்

பா. கிருபாகரன் - ந. ஜெயகாந்தன்



எரிவாயு குண்டுகளை வீடுகளுக்கு அனுப்பி தவறிழைத்த அதிகாரிகளுக்கு எதிராக குற்றவியல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை » பக்கம் 02

## சபையில் ஆவேசம்; அபகீர்த்தி வேண்டாம்

### -சபாநாயகர் வேண்டுகோள்

பா. கிருபாகரன் - ந. ஜெயகாந்தன்



சபையில் ஆவேசமான முறையில் நடந்துகொள்ளுதல் மற்றும் மற்றையவர்களை அபகீர்த்திக்கு உள்ளாக்கும் வகையில் கருத்துக்களை முன்வைப்பதை தவிர்த்துக்கொள்ளுமாறு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன அனைத்து பாராளுமன்ற » பக்கம் 02

## 10,000 கண்களை தானமாகப் பெற்றவர் கூறும் கூற்றா இது

### அமைச்சர் விமல் வீரவன்ச விசனம்

பா. கிருபாகரன் - ந. ஜெயகாந்தன்

பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட கண்களை தானமாக பெற்ற பாகிஸ்தானின் பாதுகாப்பு அமைச்சரிடமிருந்து இலங்கை பிரஜையின் கொலை தொடர்பில் இவ்வாறான மலினமான பதிலை எதிர்பார்க்கவில்லை என்று அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கைத்தொழில், வர்த்தக அமைச்சுகள் மற்றும் நான்கு இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில். பாகிஸ்தானில் மிகவும் கொடூரமான முறையில் தாக்குதல் நடத்தி » பக்கம் 02



# சேர் பொன் இராமநாதனின் 91 ஆவது குருபூசை அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஸ்தாபகத்துக்கு அடித்தளமான பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவுனரும், சைவப் பெருவள்ளலாருமான சேர் பொன் இராமநாதனின் 91 ஆவது குருபூசை நேற்றுக் காலை இடம்பெற்றது.

பல்கலைக்கழக வளாகத்தினுள் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் விசேட அபிஷேகம், பூஜையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள சேர் பொன் இராமநாதனின் உருவச் சிலைக்கும், சபா மண்டபத்தினுள் உள்ள உருவப் படத்துக்கும் துணைவேந்தரும் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா மலர்மாலை அணிவித்து, வணக்கம் செலுத்தினர்.

இந்நிகழ்வில், சேர் பொன் இராமநாதன் அறக்கட்டளையின் சார்பில் பேராசிரியர் சி. சிற்றம்பலம் மற்றும் முன்னாள் துணைவேந்தரும், பேரவை உறுப்பினருமான பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, பதிவாளர் வி. காண்டீபன், இந்து கற்கைகள் பீடத்தைச் சேர்ந்த முன்னாள் துறைத் தலைவர் பேராசிரியர் எம். வேதநாதன், முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ், பேராசிரியர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ், பீடாதிபதிகள், துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (40)

## கொரோனாவால் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 14,533 ஆக உயர்ந்துள்ளது. இதேவேளை, நாட்டில் நேற்று மேலும் 757 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இவற்றுடன் இலங்கையின் மொத்த கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 569,928 ஆக அதிகரித்துள்ளது.

## சபையில் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களையும் கேட்டுக்கொண்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை சபாநாயகர் அறிவிப்பு நேரத்திலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் என்னை சந்தித்து தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதன்படி அனைத்து எம்.பிக்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முழுமையான பொறுப்பை சபாநாயகர் என்ற ரீதியில் நான் கொண்டுள்ளேன். இதன்படி அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளேன். எவ்வாறாயினும் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்கள் மீண்டும் இடம்பெறாதவகையில் பார்த்துக் கொள்ளுமாறு அனைத்து எம்.பிக்களையும் கேட்டுக் கொள்கின்றேன்.

குறிப்பாக சபையில் உரையாற்றும் போது ஆவேசமாக கருத்து வெளியிடுதல் மற்றும் மற்றையவர்கள் மீது தனிப்பட்ட ரீதியில் அபகீர்த்திகளை ஏற்படுத்தும் வகையில் குற்றச்சாட்டுகளை முன்வைப்பதில் இருந்து தவிர்த்துக்கொள்ளுமாறும் மிகவும் வினயமாக கேட்டுக் கொள்கின்றேன் என்றார்.

## இந்தியாவின் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள வெலிங்டன் பயிற்சி மையத்தில் இன்று நடைபெறவிருந்த ஒரு பயிற்சி கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக நேற்று புதன்கிழமை முப்படைகளின் தலைமை தளபதி பிபின் ராவத் மற்றும் அவருடைய மனைவி உட்பட சில குடும்ப உறுப்பினர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் 14 பேர் முற்பகல் 11.47 மணிக்கு கோவை சூலூரிலிருந்து எம்.ஐ 17 வி 5 ரக இராணுவ ஹெலிகொப்டரில் பயணத்தை ஆரம்பித்தனர்.

பயணம் ஆரம்பித்து 37 ஆவது நிமிடத்தில் நண்பகல் 12.20 மணியளவில் வெலிங்டனை அடைவதற்கு 10 கிலோ மீட்டர் தூரம் இருந்த நிலையில் குன்னூர் பிரதேசத்தின் காட்டேரி பகுதியில் வந்துகொண்டிருந்த ஹெலிகொப்டர் திடீரென பெரும் சத்தத்துடன் வெடித்து சிதறியது.

பாரிய சத்தத்துடன் வெடிப்பு ஏற்பட்டதையடுத்து குறித்த பிரதேசத்தில் இருந்த மக்கள் செய்வதறியாது திகைத்து நின்ற வேளையில்,பெரும் புகை மண்டலம் ஏற்பட,புகை வந்த திசையை நோக்கி அக்கிராம மக்கள் விரைந்துள்ளனர்.ஆனால், அந்த பிரதேசமெங்கும் பெரும் தீ பரவியிருந்ததனால்,மக்களால் அருகில் செல்ல முடியவில்லை. இந்நிலையில்,நண்பகல் 12.25 மணியளவில் அப்பிரதேச மக்கள் அதிகாரிகளுக்கு தகவல்களை வழங்கியுள்ளார்கள்.

இந்நிலையில்,12.45 மணியளவில் குறித்த பிரதேசத்துக்கு விரைந்து வந்த தீ அணைப்பு படை வீரர்கள் தீயை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அதனை தொடர்ந்து குறித்த பிரதேசத்துக்கு விரைந்து வந்த விமானப்படையினர்,பொலிஸார்,மற்றும் இராணுவத்தினர் இணைந்து தீயில் கருகிக் கொண்டிருந்த 7 பேரின் உடலை முதலில் மீட்டதுடன், ஏனையோரை தேடும் படலத்தை முடுக்கிவிட்டனர். பின்னர் காட்டுப்பகுதிக்குள் சிதறிக்கிடந்த,உயிருக்கு போராடி கொண்டிருந்த ஏனைய 7 பேரையும் உடனடியாக வைத்தியசாலைகளுக்கு கொண்டு சென்றனர்.

ஆனால், வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டவர்களில் பலர் பெரும் தீக்காயங்களுக்கு உள்ளாகியிருந்ததால் அவர்களும் பலியானார்கள். ஒருவர் மாத்திரமே (இந்த செய்தி எழுதும்வரை)காயங்களுடன் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருவதாக அங்கிருந்து வந்த செய்திகள் தெரிவித்தன.

விமானத்தில் ஏற்பட்ட தீ தொடர்ந்து வீரியமாக எரிந்த காரணத்தினால் தீயை அணைப்பதில் தீயணைப்பு வீரர்கள் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர் .சுமார் 2.30 மணி நேரத்திற்கு பின்னரே தீயணைப்பு துறையினர் போராடி தீயை அணைத்தனர்.

விபத்துக்கான காரணம்.

மோசமான வானிலையே நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே நடந்த ஹெலிகொப்டர் விபத்திற்கு காரணமாக இருக்கலாம் என சொல்லப்படுகிறது. எனினும் இதுகுறித்து அதிகாரபூர்வ தகவல் இந்த செய்தி எழுதப்படும்வரை அறிவிக்கப்படவில்லை. குன்னூரில் நேற்று அதிகபட்ச வெப்பநிலை 20 டிகிரியாகவும் குறைந்தபட்சம் 12 டிகிரியாகவும் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.கோவையிலிருந்து புறப்பட்ட இந்த ஹெலிகொப்டர் காட்டேரி மலைப்பாங்கான இடம் அருகே உள்ள தைல மரங்களில் மோதி விபத்துக்குள்ளானதாக உள்ளூர் மக்கள் தெரிவித்துள்ளனர்.

## முள்ளிவாய்க்கால் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில், அவர் உட்பட 10 பேர் அன்றைய தினம் நீதிமன்ற தடை உத்தரவை மீறி கல்குடா பொலிஸ் பிரிவிலுள்ள நாகர்வட்டை கடற்கரையில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கு தீபச் சுடர் ஏற்றி, கடலில் பூக்களைத் தூவி, அஞ்சலி செலுத்திய அதனை படம் எடுத்து முகநூலில் பதிவு செய்த நிலையில் அவர்களை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கல்குடா பொலிஸார் கைது செய்தனர்.

இது தொடர்பான வழக்கு வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. வாழைச்சேனை மாவட்ட நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம். பசீல் முன்னிலையில் இவ் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் ஆஜராகிய சிரேஷ்ட சட்டத்தரணி க.சுகாஸ் விண்ணப்பித்த பிணை மனுவின் அடிப்படையில் 10 பேரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

## நோர்வே ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் மற்றும் அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் குருசாமி ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

தற்போதுள்ள அரசியல் சூழ்நிலைகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் பற்றி இதன்போது விளக்கமளிக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் அரசியல் உரிமை சார்ந்து தொடர்ந்து உறுதியான ஆதரவு நிலைப்பாட்டில் உள்ள நாடான நோர்வேயுடன் தமிழ் தரப்பின் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இச்சந்திப்பு ஒரு மணி நேரம் நடைபெற்றதாக ரெலோ விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரண்டு ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவதுவல தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கைத்தொழில், வர்த்தக அமைச்சுகள் மற்றும் நான்கு இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜே.சி.அலவதுவல இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

தற்போது அத்தியாவசியப் பொருட்கள் பல துறைமுகத்தில் தேங்கியுள்ளன. அதேபோன்று சிறிய மற்றும் நடுத்தர வர்க்க கைத்தொழிலாளர்கள் தமக்கு தேவையான மூலப் பொருட்களை கொண்டுவர முடியாது பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். டொலர் கையிருப்பு பிரச்சினையே இதற்கு காரணமாகும். இதனால் இந்தப் பிரச்சினை தொடர்பில் ஆராய வேண்டும்.

தற்போதுள்ள தகவல்களுக்கமைய 2 பில்லியன் டொலர்கள் வரையில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் இறக்குமதி தொடர்பாக பிரச்சினைகள் காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது. இதனாலேயே எரிவாயு பிரச்சினையும் ஏற்பட்டது. இந்நிலையில் நாட்டின் உற்பத்தி உள்ளிட்ட அனைத்து துறைகளும் வீழ்ச்சியடையும் நிலைமையே ஏற்பட்டுள்ளது.

இவ்வாறாக நாடு துரதிஸ்டவசமான நிலைக்கு தள்ளப்படுகின்றது. இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணாவிட்டால் பிரச்சினை மேலும் தீவிரமடையும் அபாயம் காணப்படுகின்றது.

இதேவேளை எரிவாயு விடயத்தில் அதனை கொண்டுவர முடியாத நிலைமை ஏற்பட்டது. இதனாலேயே வரிசை நிலைமை ஏற்பட்டது. இந்த நிலைமையால் இரண்டு வாரங்களில் 458 வீடுகளில் வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. எரிவாயு கசிவு ஏற்பட்டுள்ளது. இந்த சம்பவங்கள் இன்னும் நடக்கின்றன.

இந்நிலையில் எரிவாயு சிலிண்டரின் மூடியை கழற்றாது வைத்திருந்தால் மாத்திரம் மாற்றுவதை நிறுத்தி அனைத்து சிலிண்டர்களையும் மீளப்பெற்றுக் கொள்ள வேண்டும். அத்துடன் இதனால் வீடுகளில் ஏற்பட்ட விபத்துகள் தொடர்பில் நஷ்ட ஈடுகளை வழங்க வேண்டும் என்றார்.

## நாட்டில் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லொக்குகே தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் அமைச்சர் இதனை கூறியுள்ளார்.

இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்கங்களுடன் நடத்திய பேச்சுவார்த்தை வெற்றியடைந்துள்ள நிலையில், மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை என அவர்கள் உறுதியளித்துள்ளனர்.

இதனடிப்படையில், மின் விநியோக தடை ஏற்படாது.

எவ்வாறாயினும் அண்மையில் ஏற்பட்ட திடீர் மின் விநியோக துண்டிப்பு சீர்குலைவு நடவடிக்கையா என்பதை அறிய விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இதனை தவிர யுகதனவி மின் உற்பத்தி நிலையம் சம்பந்தமாக அமெரிக்காவுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கை குறித்து எதிர்வரும் திங்கட்கிழமை அமைச்சரவையில் கலந்துரையாடவுள்ளதாகவும் அமைச்சர் லொக்குகே குறிப்பிட்டுள்ளார்.

## முன்னாள் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் பிரம்புகள்,பித்தளை மட்பாண்டங்கள் ,மரப்பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குற்றம்சாட்டிய அவர் மேலும் கூறுகையில்,

தொழில் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு அரசாங்கம் வாக்குறுதியளித்திருந்தது. சிறு கைத்தொழில் முயற்சிகளுக்கு வங்கிக்கடன்கள் மூலம் வாய்ப்புக்கள் ஏற்படுத்திக்கொடுப்பதாக அரசு கூறியிருந்தது. ஆனால் எதுவும் நடைபெறவில்லை. இதனால் முன்னாள் போராளிகள் வறுமை காரணமாக தற்கொலை முயற்சிகளில் ஈடுபடும் அளவுக்கு நிலைமை உள்ளது. பலர் தற்கொலையும் செய்துள்ளனர்.

மேலும் பல முன்னாள் போராளிகள் வீதிகளில் கையேந்தி யாசகம் பெறும் நிலையும் காணப்படுகிறது. எனவே அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு அரசு எந்த வசதி வாய்ப்புக்களையும் செய்யவில்லை என்ற குற்றத்தை நான் முன் வைக்கின்றேன் என்றார்.

## உணவு, மருந்துகள் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாணயமாக ஒரு பில்லியன் டொலர்கள் மட்டுமே உள்ளது. இந்நிலையில் தேசிய வங்கிகளிடம் இருந்து மத்திய வங்கி பெற்றுக்கொண்ட குறுகியகால கடன்களாக டிசம்பர் மற்றும் ஜனவரி மாதத்திற்கு மாத்திரம் 114 மில்லியன் டொலர்களை செலுத்த வேண்டியுள்ளது. ஏனைய கடன்களாக 1137 மில்லியன் டொலர்களும் அதற்கு வட்டியாக 194.7 மில்லியன் டொலர்களையும் செலுத்த வேண்டியுள்ளது.

எனவே கையிருப்பில் உள்ள நிதியில் இவற்றை செலுத்தினால் ஜனவரி மாதத்தில் வெறுமனே 140 மில்லியன் டொலர்கள் மட்டுமே மிஞ்சும். இவ்வாறு ஒருபோதும் நெருக்கடி நிலைமை ஏற்பட்டதில்லை. அடுத்த ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் மொத்தமாக 4843 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்த வேண்டியுள்ள நிலையில் இப்போது எமது கையிருப்பில் வெறும் 140 மில்லியன் டொலர்களே உள்ளது. இது மிகப்பெரிய நெருக்கடியை நாட்டில் ஏற்படுத்தப்போகின்றது.

ஆகவே அரசாங்கமும் நிதி அமைச்சரும் பொறுப்புடன் செயற்படாது போனால் 220 இலட்சம் மக்களுக்கும் உணவு இல்லாது, மருந்துகள் இல்லாது, எரிபொருள் இல்லாது பாதிக்கப்படும் நிலைமை ஏற்படும். இது தொடர்பாக அரசாங்கம் என்ன வேலைத்திட்டத்தை முன்னெடுக்க போகின்றது.

பொருளாதார நெருக்கடி நிலைமை தொடர்மாக இருந்தால் கூகுள் வரைபடம் கூட நிறுத்தப்படும், இதுவே சாதாரண உதாரணமாகும். ஆகவே இதனை விளங்கிக்கொண்டு சர்வதேச நாணய நிதியத்தை நாடி பிரச்சினையை தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

## பௌத்த ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைத்தொழில் அமைச்சு மற்றும் 4 இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

நாம் வெளிநாடுகளில் சென்று இலங்கைக்கு முதலீடுகளை செய்யுமாறு கூறினோம், ஆனால் அவர்கள் ஒரே ஒரு விடயத்தை மட்டுமே கேட்கின்றார்கள். அதாவது ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியின் தலைவர் நாட்டில் எப்போதும் குண்டு வெடிக்கலாம் என அச்சுறுத்தும் நிலையில் நாம் எவ்வாறு அங்கு வருவது என கேட்கின்றனர். ஆகவே இந்த நிலைமையில் எதிர்காலத்தில் நாட்டில் வர்த்தக செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலைமையே ஏற்படும்.

இன்று பாகிஸ்தானில் வேறு இனக்குழு மூலமாக இலங்கை பிரஜை ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டதை போன்று இலங்கையில் பல்வேறு காலகட்டங்களில் பல கொலைகள், அழிவுகள் இடம்பெற்றுள்ளன. தமிழர்கள் அடித்தும், எரித்தும் கொல்லப்பட்ட வரலாறுகள், அதற்கான ஆதாரங்களுடன் உள்ளன. தமிழர் ஆயுதம் ஏந்த முன்னர் நீண்டகால அரசியல் போராட்டத்தை முன்னெடுத்தனர். அரசாங்கத்துடன் பேசி தீர்க்க முடியாத நிலையிலேயே ஆயுதம் தூக்க நேர்ந்தது.

பலவீனமான, கவனயீனம் காரணமாக அடிப்படைவாதமும், பயங்கரவாதமும் நாடுகளுக்கு இடையில் பரவுவதாக ஜனாதிபதி தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். இலங்கையிலும் அதுவே இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது . பௌத்த அடிப்படைவாதமே இலங்கையிலும் பரவிக்கொண்டிருக்கின்றது. ஜனாதிபதி ஊடக மையத்தின் மூலமாகவே கீழ்த்தரமான பதிவுகள் பதியப்படும் நிலைமை நாட்டிற்கு ஏற்பட்டுள்ளது என்றார்.

## 10,000 கண்களை ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இஸ்லாமிய அடிப்படைவாதிகளினால் கொல்லப்பட்ட பிரியந்த குமாரவுக்கு இரங்கலை தெரிவிக்க இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்கின்றேன்.

இதேவேளை பாகிஸ்தானின் பாதுகாப்பு அமைச்சர் இந்த சம்பவத்தை மிகவும் சிறியதாக கூறி , அதனை இனம் மன நிலையால் ஏற்பட்டதாக கருதும் வகையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

மத அடிப்படைவாத கொலைச் செயற்பாடுகளை ஊக்குவிப்பதை போன்றே அந்தக் கருத்தை கூறியுள்ளார். இதனை அந்நாட்டின் பதிலாக எதிர்பார்க்கவில்லை என்றார்.

## ரயிலுடன் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளனர்.

திம்புளை - பத்தனை போகாவத்தை பகுதியில் புதிய வீடமைப்பு திட்டத்தில் வசித்தவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். எஸ்.பிரான்சிஸ் (70வயது- தந்தை), பி.கமலாவதி (65வயது -தாய்), பிரான்சிஸ் குமார்ராஜ் (40 வயது -மகன்) ஆகியோரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். ரொசெல்ல மற்றும் வட்டவளை ரயில் நிலையங்களுக்கு இடையில் 103 வது மைல் கல் பகுதியில் நேற்று முற்பகல் 11.45 அளவில் மூவரும் ரயிலில் மோதுண்டுள்ளனர்.

குறித்த மூவரும் ரயிலில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார்களா? அல்லது ரயிலில் அடிபட்டு உயிரிழந்தனரா? என்பது தொடர்பில் வட்டவளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

உயிரிழந்த மூவரின் சடலங்களும் அதே ரயிலில் நாவலப்பிட்டி புகையிரத நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு நாவலப்பிட்டி பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரும் கடந்த 10 நாட்களுக்கு முன் தமது வீட்டை மூடிவிட்டு வீட்டிலிருந்து வெளியேறியுள்ளனர்.

இந்த நிலையில் இவர்கள் மூவரும் நேற்று புகையிரத விபத்தில் உயிரிழந்துள்ளதாக தமக்கு தகவல் கிடைத்ததாக அவர்கள் வாடகைக்கு வசித்த வீட்டுக்கு அருகில் வசிக்கும் ஒருவர் தெரிவித்தார்.

உயிரிழந்தவர்களில் மகன் மசாலா தூள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தவர் எனவும், அவர் நான்கு முறை திருமணம் செய்து கொண்டவர் எனவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

மகனை தேடி அவரை திருமணம் முடித்த பெண்கள் என கூறி ஏற்கனவே பல பெண்கள் வீட்டுக்கு வந்துள்ளதாகவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். கடனாளிகளிடமிருந்து தப்பிக்க, உயிரிழந்த மகன், தந்தை மற்றும் தாயுடன் ரயிலில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என பிரதேசவாசிகள் மேலும் தெரிவிக்கின்றனர்.

அதேபோல் உயிரிழந்த மகனுக்கு எதிராக பிரதேச மக்கள் பண மோசடி தொடர்பில் திம்புளை - பத்தனை பொலிஸில் பல முறைப்பாடுகளையும் செய்துள்ளனர். அதேபோல கடன் கொடுத்தவர்களில் பலர் உயிரிழந்த மகனை தேடி பல முறை அவர் வசித்த வீட்டுக்கு வந்துள்ளதாகவும் போகாவத்தை மக்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# இலங்கையில் 243 பெண்கள் கொலையில் 128 மரணத்திற்கு கணவன்மாரே காரணம்

## -ஐ.நா. சனத்தொகை நிதியத்தின் ஆய்வில் தகவல்-

இலங்கையில் 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இலங்கையில் இடம்பெற்ற 243 பெண்களின் கொலைகளில், 128 பேரை அவர்களின் சட்டப்பூர்வமான கணவன்மாரே செய்திருக்கின்றமை தெரியவந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் சனத்தொகை நிதியம் மேற்கொண்ட ஆய்வொன்றில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

விபத்துகள், தற்கொலைகள் மற்றும் பெண்கள் என்ற காரணத்துக்காகக் கொலைசெய்யப்படுதல் ஆகிய விடயப்பரப்பின் தகவல்களைத் திரட்டும் நோக்கில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் இவ்வாறான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்ட முதல் சந்தர்ப்பம் இதுவாகும். இதன்படி குறித்தக் காலப்பகுதியில் இடம்பெற்ற இயற்கைக்கு மாறான 243 மரணங்களில், 62 சதவீதமானவை குறித்த பெண்களின் சட்டபூர்வ கணவர் அல்லது முன்னாள் கணவர் அல்லது குடும்ப உறுப்பினர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதேவேளை, இவ்வாறான சம்பவங்களில் 69 சதவீதமானவை பதிவு செய்யப்படவில்லை என்றும் தெரியவந்துள்ளது. இது ஆபத்தான விடயம் என்றும் ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## -பாராளுமன்றத்தில் அமைதியின்மை- சபாநாயகரினால் விசேட குழுவொன்று நியமனம்

பா.கிருபாகரன்,
ந.ஜெயகாந்தன்.

பாராளுமன்றத்தில் கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் இடம்பெற்ற அமைதியின்மை சம்பவங்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக சபாநாயகரினால் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தலைமையில் 10 பேர் கொண்டதாக குறித்த குழுவை அமைத்துள்ளதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார். இதன்படி குழுவின் ஏனைய உறுப்பினர்களாக ஆளும் கட்சியை சேர்ந்த சமல் ராஜபக்ஷ, வாசுதேவ நாணயக்கார, சுசில் பிரேமஜயந்த, பந்துல குணவர்தன. அனுர பிரியதர்ஷன யாப்பா ஆகியோரும் எதிர்க்கட்சி உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், ரவூப் ஹக்கீம், கயந்த கருணாதிலக்க, விஜித்த ஹேரத், ரஞ்சித் மத்துமபண்டார ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பாதுகாப்பு அமைச்சு மீதான வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது, மனுஷ நாணயக்காரவுக்கு மேலதிக நேரம் வழங்காமை தொடர்பில் சபையில் அமைதியின்மை ஏற்பட்டிருந்தது.

இதனை தொடர்ந்து சனிக்கிழமையும் சபையில் சர்ச்சை ஏற்பட்டிருந்த நிலையில், சபைக்குள் தமக்கு பாதுகாப்பு இல்லை என்று தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் சபை அமர்வுகளை புறக்கணிக்கத் தீர்மானித்திருந்தனர்.இதன்படி கடந்த திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமைகளில் அவர்கள் சபை நடவடிக்கைகளில் கலந்துகொண்டிருக்கவில்லை.இந்நிலையில் சபையில் ஏற்பட்ட அமைதியின்மை சம்பவங்கள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவென குழுவை அமைத்துள்ளதாக நேற்று புதன்கிழமை சபாநாயகர், சபையில் தெரிவித்துள்ளார்.

(முன்னர் வந்த செய்தி பக்கம் 9 இல்)

## கடந்த ஞாயிறு ஆற்று நீரில் அடித்துச் செல்லப்பட்ட இளம் தாயின் சடலம் மீட்பு

### -இரண்டரை வயது குழந்தை இதுவரை மீட்கப்படவில்லை-

கெலிஓயா கழுகமுவ பகுதியில் நில்லம்ப ஓயாவில் நீரில் அடித்துச் செல்லப்பட்ட இளம்தாயின் சடலம் மகாவலி கங்கையில் கரையொதுங்கிய நிலையில் நேற்று புதன்கிழமை முற்பகல் மீட்கப்பட்டுள்ளது.

பேராதனை பாலத்திற்கு அருகில் எஸ். அஸ்பா (வயது 20) என்ற தாயின் சடலம் பொலிஸாரினால் மீட்கப்பட்டது. எனினும் இத்தாயுடன் நீரில் அடித்துச் செல்லப்பட்ட அவரின் இரண்டரை வயது குழந்தை இதுவரை மீட்கப்படவில்லை.

கடந்த 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கண்டி பூரணவத்தை ஒரே குடும்பத்தை சேர்ந்த ஐந்து பேர் நில்லம்ப ஓயாவுக்கு நீராடச் சென்ற சந்தர்ப்பத்தில் நீரோடையில் நீர் பெருக்கெடுத்தமையால் அவர்களில் மூவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டனர். இதில் உறவினரான எம். ரஸ்பான் (வயது 21) என்ற இளைஞன் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு கம்பளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இவரின் ஜனாஸா நல்லடக்கம் திங்கட்கிழமை உடுநுவர தஸ்கரை ஜும்ஆ பள்ளிவாசலில் இடம்பெற்றது.

இதில் காணாமல் போனவர்களைத் தேடும் பணிகள் நில்லம்ப ஓயா மற்றும் மகாவலி கங்கையில் பொலிஸ் மற்றும் கடற்படை சுழியோடிகள் மற்றும் பிரதேசவாசிகளால் முன்னெடுக்கப்பட்டு வந்தது .

இந்நிலையில் நேற்று புதன்கிழமை முற்பகல் இளம் தாயின் சடலம் மீட்கப்பட்டது.எனினும் இத்தாயுடன் நீரில் அடித்துச் செல்லப்பட்ட அவரின் இரண்டரை வயது குழந்தை இதுவரை மீட்கப்படவில்லை.தேடும் பணிகள்முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பான விசாரனைகளை பேராதனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## குறிஞ்சாக்கேணி இழுவைப்படகு விபத்து; மூவருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

கிண்ணியா- குறிஞ்சாக்கேணி இழுவைப்படகு தொடர்பில் கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களையும் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்றம் மீண்டும் உத்தரவிட்டுள்ளது.

திருகோணமலை நீதிமன்ற நீதவான் பயாஸ் ரசாக் முன்னிலையில் நேற்று இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது குறித்த மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் கிண்ணியா- பெரியாற்றுமுனை பகுதியைச் சேர்ந்த முகமது அலி முகமது ரியாஸ் (40வயது) அப்துல் முத்தலிப் பஸ்மி (35வயது) ஜமால்தீன் முபாரக் (35வயது) எனவும் தெரியவருகின்றது.

கிண்ணியா குறிஞ்சாக்கேணி பகுதியில் கடந்த 23ஆம் திகதி இழுவைப் படகு கவிழ்ந்ததில் மாணவர்கள் உட்பட 6 பேர் உயிரிழந்த நிலையில், இழுவைப்படகை செலுத்திய சந்தேக நபர்கள் தலைமறைவாகி இருந்தனர்.

இந்நிலையில் கடந்த நவம்பர் 24ஆம் திகதி கிண்ணியா பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் இன்று மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.இதனையடுத்து சந்தேக நபர் கள் மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு கட்டளையிட்டார்.இதேவேளை கிண்ணியா நகர சபை தவிசாளர் இழுவைப் படகைப் பாவிப்பதற்கு அனுமதி வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் வழக்கு இன்று அழைக்கப்பட உள்ளதாகவும் தெரிய வருகின்றது.

## டிப்பர் வாகனம் மோதி கிராம சேவகர் காயம்

வவுனியா மயிலங்குளம் பகுதியில் டிப்பர் வாகனம் மோதி கிராம சேவையாளர் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

நேற்று புதன்கிழமை காலை 9 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.பண்டாரிக்குளத்திலுள்ள தனது வீட்டில் இருந்து ஆசிகுளம் கிராம சேவகர் பிரிவிற்கு நேற்று காலை கடமைக்கு சென்று கொண்டிருந்த போது மயிலங்குளம் சந்திக்கு அண்மித்த பகுதியில் உள் ஒழுங்கையிலிருந்து எதுவித சமிக்ஞைகளுமின்றி பிரதான வீதிக்கு கிரவல் ஏற்றி கொண்டு வந்த டிப்பர் வாகனம் கட்டுப்பாட்டையிழந்து கிராம சேவகர் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மீது மோதி விபத்திற்குள்ளாகியது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்து கொண்டிருந்த ஆசிகுளம் கிராம சேவகரான பாலசுப்பிரமணியம் ஜனகன் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

## இரத்தினபுரியில் இதுவரை 43,981 கொரோனா தொற்றாளர்கள்

இரத்தினபுரி மாவட்டத்தில் இதுவரை 43981 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், கடந்த நவம்பர் மாதம் மட்டும் 3989 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இரத்தினபுரி மாவட்ட கொரோனா தொற்று தடுப்பு பிரிவு குழு கூட்டம் செவ்வாய்க்கிழமை சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. இதன்போது மேற்படி மாவட்டத்தில் கொரோனா தொற்று பரவுவதை கட்டுப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. முதியோருக்கு கொவிட் பூஸ்டர் தடுப்பூசி வழங்குவது முக்கியமானதாகும் என்று இரத்தினபுரி மாவட்ட சுகாதார பிரிவினர்கள் இதன்போது தெரிவித்ததுடன், இது சம்பந்தமாக மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களின் ஊடாக மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் எனவும் இதன்போது தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த மாகாண ஆளுநர், இரத்தினபுரி மாவட்ட மக்களுக்கு தேவையான தடுப்பூசிகளை எவ்வித குறைபாடுகளுமின்றி பெற்று கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

எதிர்வரும் சிவனொளிபாத மலை யாத்திரை சுகாதார பிரிவினர்களின் ஆலோசனைக்கமைய ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தெரிவித்தார்.

மேற்படி கூட்டத்தில் சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் சுனில் ஜயலத், இரத்தினபுரி மாவட்ட செயலாளர் மாலணி லொக்குபோத்தாகம உட்பட அரச அதிகாரிகள், சுகாதார அதிகாரிகள் , பாதுகாப்பு அதிகாரகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## 30 லட்சம் ரூபா அபின் போதைப் பொருளுடன் வாழைச்சேனை பகுதியில் ஒருவர் கைது

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் முப்பது லட்சம் ரூபா மதிக்கத்தக்க அபின் போதை பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டார தெரிவித்தார்.

வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவப் புலனாய்வு துறையினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த பண்டாரவின் வழிகாட்டலில் குற்ற புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரி ஈ.ஏ.டபள்யூ. எஸ்.எதிரிசிங்க தலைமையிலான பொலிஸ் உத்தியோகத்தர்களான ஜே.பகீர்தரன், விக்ரம சேகர, எஸ். பண்டார ஆகியோர் அடங்கிய குழுவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே அபின் போதைப் பொருளும் சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாழைச்சேனை அல் அக்ஷா வீதியில் சந்தேக நபரின் சகோதரியின் வீட்டினை சுற்றி வளைத்த போது அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த 500 கிராம் அபின் போதை பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் ஓட்டமாவடி புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த் 39 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். என்றும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

## துவிச்சக்கர வண்டிகளுக்கு ஸ்டிக்கர்களை ஒட்டும் நடவடிக்கை



துவிச்சக்கர வண்டிகளுக்கு ஸ்டிக்கர்களை ஒட்டும் நடவடிக்கை மாலை யாழ்ப்பாண பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டது.

வீதி விபத்துக்களை குறைப்பதற்காக 'உங்களின் பாதுகாப்பிற்காக நாம்' எனும் கருப்பொருளில் துவிச்சக்கர வண்டிகளில் இந்த ஸ்டிக்கர்களை ஒட்டும் நடவடிக்கை யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பல இடங்களில் நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காங்கேசன்துறை வீதியில் உள்ள யாழ்ப்பாணம் பிரதான தபால் நிலையத்திற்கு முன்பாக வைத்து வீதியினால் சென்ற துவிச்சக்கர வண்டிகள் பொலிஸாரினால் நிறுத்தப்பட்டு ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்ட பொலீஸ் நிலையங்களுக்கு பொறுப்பான சிரேஸ்ட பொலீஸ் அத்தியட்சகரின் ஆலோசனைக்கமைவாக, மாவட்ட போக்குவரத்து பிரிவு மற்றும் யாழ்ப்பாண பொலீஸ் போக்குவரத்து பிரிவும் இணைந்து இந்த நடவடிக்கையினை நேற்று முன்னெடுத்திருந்தனர். நேற்று இடம்பெற்ற ஸ்டிக்கர்களை ஒட்டும் நடவடிக்கையில் யாழ்ப்பாண போக்குவரத்து பிரிவு பொலீஸ் பரிசோதகர் மஞ்சுல டி சில்வா, உப பொலீஸ் பரிசோதகர்

பிரியந்த அபேயரத்ன, யாழ்ப்பாண பொலீஸ் நிலைய போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி விதான பத்திரன, உள்ளிட்ட சில பொலீஸார் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(40)

## நாங்கள் இன்றும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியுடனேயே பயணிக்கின்றோம்

### -நல்லூர் பிரதேச சபை தவிசாளர்-

நாங்கள் இன்றும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியுடன் தான் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகச் சிலர் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியிலிருந்து விலகித் தன்னிச்சையாகச் செயற்படுகின்றார்கள் என நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் பத்மநாதன் மயூரன் தெரிவித்தார். நல்லூர் பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான பாதீட்டைச் சபையில் சமர்ப்பிப்பதற்கான கூட்டம் தவிசாளர் பத்மநாதன் மயூரன் தலைமையில் ; செவ்வாய்க்கிழமை பிற்பகல்-02 மணி முதல் சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது இடம்பெற்ற விவாதத்தில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பெண் உறுப்பினர் திருமதி- வாசுகி சுதாகர் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியிலிருந்து பொது மக்களிடம் தேசியம், தேசம் சார்ந்த கொள்கைகள் ஊடாகத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வாக்குப் பெற்று நல்லூர் பிரதேச சபையில் உறுப்பினர் பதவியைப் பெற்றுக் கொண்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கொள்கைவழிப் பயணத்திற்கு இடையூறாக ஒரு குழுவாகத் தேச விரோதச் சக்திகளுடன் இணைந்து எங்கள் கொள்கைவழிப் பயணத்தில் வாக்குகளைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு எதிராகச் செயற்படும் நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் தயாரித்த வரவு செலவுத் திட்டத்தை நாம் எப்படி எமது மக்களுக்குச் சரியான வரவு செலவுத் திட்டம் எனக் கொள்ள முடியும்? இந்த வரவுசெலவுத் திட்டம் எவ்வாறு தமிழ்த்தேசத்திற்கு நலனைத் தரும்? எனவும் அவர் கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளித்த போதே தவிசாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (18)

## புங்குடுதீவு குறிச்சிக்காடு வீதி புனரமைப்புப் பணிகள் துரிதம்

சூழலியல் மேம்பாட்டு அமைவனத்தின் (சூழகம்) செயலாளர் கருணாகரன் நாவலனின் முயற்சியில் வீதி அபிவிருத்தித் திணைக்களம் ஊடாகப் புங்குடுதீவு குறிச்சிக்காடு இரட்டைத் தெருச் சந்தியினைக் காப்பெற் வீதியாகப் புனரமைக்கும் பணிகள் தற்போது துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

புங்குடுதீவின் அடையாளமாகத் தற்காலத்தில் கருதப்படுகின்ற பிரமாண்டமான கண்ணகை அம்மன் கோபுர வளைவினை உள்ளடக்கிய இச் சந்தியானது நீண்டகாலமாகவே குன்றும் குழியுமாக காணப்பட்டமையால் இந்தச் சந்தியால் தினமும் பயணிக்கும் நூற்றுக்கணக்கான மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வந்தனர். குறிப்பாக மழைகாலங்களில் குறித்த சந்தியைப் பயன்படுத்த முடியாதளவுக்குப் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.இதேவேளை, இன்னும் சில நாட்களில் புனரமைப்புப் பணிகள் நிறைவுக்கு வரும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (18)

தினக்குரல்
THINAKKURAL
An Independent Daily Voice in Tamil
ஏசியன் மீடியா பப்பிளிகேஷன் (பிரைவேட்) லிமிட்டெட்
இலக்கம் : 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
ஆசிரிய பீடம்:- 0217388301, 0217388302, 0217388303
பக்ஸ்:- 0217388304 விளம்பரம்:- 0217388307, விநியோகம்:- 0217388309
வியாழக்கிழமை 09 டிசம்பர் 2021 Thursday 09th December 2021

## மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களை தடுத்து நிறுத்த கனதியான சர்வதேச சட்டங்கள் அவசியம்

பூமியில் இடம்பெறும் மனித குலத்திற்கு எதிரான மிக மோசமான குற்றங்களில் இனப்படுகொலை தலையானதாகும். டிசம்பர் 9 இல் இன்று அனுட்டிக்கப்படும் உலக இனப்படுகொலை நினைவு தினம் என்பது ஐ. நா. வினால் ஏற்படுத்தப்பட்ட ஒரு சர்வதேச நிகழ்வாகும். இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூர்வதற்கும் எதிர்கால இனப்படுகொலைகளைத் தடுத்து நிறுத்தவேண்டிய மனிதகுலத்தின் பொறுப்பை முன்னிறுத்திக் காட்டுவதற்குமாக உத்தியோகபூர்வமாக இத்தினம் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. 2015 ஆம் ஆண்டு முதன்முதலில் உலக இனப்படுகொலை நினைவு நாள் அனுசரிக்கப்படுவதற்கு 67 ஆண்டுகளுக்கு முன்பு 1948 ஆம் ஆண்டு டிசம்பர் 9 ஆம் திகதி ஐ.நா. பொதுச் சபையானது இது தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தது .கடந்தகால இனப்படுகொலைகளில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்வதற்கும் கௌரவிப்பதற்கும் இந்த நிகழ்வு ஒரு சந்தர்ப்பமாகும் . நிகழ்வின் நோக்கத்தை வரையறுக்கும் ஐ.நா. தீர்மானத்தின்படி, ''ஒவ்வொரு தனி அரசும் அதன் மக்களை இனப்படுகொலையிலிருந்து பாதுகாக்கும் பொறுப்பை வலியுறுத்தும் வகையில் ஒப்பந்தம் வடிவமைக்கப்பட்டுள்ளது.இத்தகைய குற்றத்தை பொருத்தமான மற்றும் தேவையான வழிகளில் தடுப்பதுடன் இனப்படுகொலைக் குற்றத்திற்காக தண்டனையிலிருந்து விலக்களிக்கப் ப்படுவதை எதிர்த்துப் போராடுவது அதைத் தடுப்பதில் ஒரு முக்கிய காரணியாகும்'' என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இனப்படுகொலை என்பது ஒரு இன அல்லது மதக் குழுவை வேண்டுமென்றே படிமுறையாக அழிப்பதாகும். இரண்டாம் உலகப் போரின்போது நாஜி ஜேர்மனியால் நடத்தப்பட்ட படுகொலைகள் வரலாற்றில் மிக மோசமான இனப்படுகொலைகளில் ஒன்றாகும். 1942 மற்றும் 1945 க்கு இடையில் 11 மில்லியன் மக்கள் திட்டமிட்ட முறையில் கொல்லப்பட்டதாக சில பதிவுகள் தெரிவிக்கின்றன . ஐ .நா. இனப்படுகொலை சாசனம் இனப்படுகொலை தொடர்பான நிகழ்வுகளை வரையறுப்பதற்கும், வழக்குத் தொடுப்பதற்கும், தண்டனை வழங்குவதற்குமான ஒரு சட்ட கட்டமைப்பை வழங்குகிறது. போலந்து-யூத வம்சாவளியைச் சேர்ந்த வழக்கறிஞர் ரபேல் லெம்கினின் கடுமையான போராட்டத்திற்குப் பின்னர் 1948 இல் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது. லெம்கின் இனப்படுகொலை ஜெனோசைட் என்ற வார்த்தையையும் உருவாக்கியவராகும்.'ஒரு இன அல்லது மதக் குழுவை அழிக்கும் நோக்கத்துடன்'இனப்படுகொலைக்கான ஐந்து செயல்களை இந்த ஒப்பந்தம் கோடிட்டுக் காட்டுகிறது.குழுவொன்றின் உறுப்பினர்களைக் கொல்லுதல் ,கடுமையான உடல் அல்லது மனப் பாதிப்பை ஏற்படுத்துதல், குழுவொன்றிற்கு உடல்ரீதியான அழிவை முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ கொண்டுவருவதற்காக கணக்கிடப்பட்ட வாழ்க்கை நிலைமைகளை வேண்டுமென்றே ஏற்படுத்துதல்,பிறப்புகளைத் தடுக்கும் நோக்கத்துடன் நடவடிக்கைகளைத் திணித்தல்,பிள்ளைகளை வலுக்கட்டாயமாக இடமாற்றம் செய்தல் என்பனவே இனப்படுகொலைக்கான முக்கியமான குற்றங்களாகும்.

இனப்படுகொலை தொடர்பாக சட்ட ரீதியான தரநிலையை ஏற்படுத்துவதற்கு நீதிமன்றங்கள் வரலாற்று ரீதியாக போராடி வருகின்றன. 'இனப்படுகொலை, போர்க்குற்றங்கள், இனச் சுத்திகரிப்பு மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள்' ஆகியவற்றிலிருந்து அரசாங்கமொன்றினால் தனது சொந்த மக்களைப் பாதுகாக்க முடியாவிட்டால், சர்வதேச சமூகம் ஏதாவது செய்ய வேண்டும் என்று கோட்பாட்டைப் பாதுகாப்பதற்கான பொறுப்பு கூறுகிறது. ஆயினும் அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச சமூகத்தின் ஆதரவு இல்லாமல் இனப்படுகொலைக்கெதிரான சர்வதேச சட்டத்தை அமுல்படுத்த முடியாது.சர்வதேச சட்டத்தில் அமுலாக்கம் தொடர்பான தெளிவான வழிமுறைகள் இன்னரும் முழுமையாக இல்லை. எனவே சர்வதேச சமூகம் அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும் நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர். கருத்தடை ,கலாசார அடையாளம், மொழிகள், சிந்தனை உணர்வு , விருப்பம், வாழ்க்கை, இயற்கை, கலை மற்றும் அடையாள உணர்வு, நம்பிக்கை ஆகியவற்றை நசுக்குவதும் இனப்படுகொலைக்கான படிமுறைகளாக கருதப்படுகின்றன .

தாயகத்தில் இருந்து வலுக்கட்டாயமாக அகற்றப்படுதல் , குடிப்பரம்பல் முறைமையை மாற்றுதல் என்பனவும் இதற்கான படிமுறையாக சுட்டிக்காட்டப்படுகிறது.அதேவேளை கலாசாரம் என்பது மக்களின் படைப்பாற்றலின் வெளிப்பாடாகும் . கலாசாரத்தை அடக்குவது என்பது மக்களின் இதயத்திலும் ஆன்மாவிலும் குண்டுகளை வீசுவதாகும். அத்தகைய வெற்றி ஒரு படுகொலையை விட மோசமானதாகும் .2019 ஆம் ஆண்டில் ரோஹிங்கியா முஸ்லிம் மக்கள் மீதான இனப்படுகொலைக்காக மியன்மாருக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் காம்பியா தாக்கல் செய்த வழக்கானது , சமீபகால நீதித்துறை வளர்ச்சி, சர்வதேச சட்டத்தின் மேம்பாட்டுக்கு ஒரு படியென கருதப்படுகிறது. எதிர்காலத்தில், சர்வதேச சட்டத்தின் விதிமுறைகளை மீறுவது தனிப்பட்ட குற்றவாளிகளுக்கு விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை நிரூபிப்பதன் மூலம் மனிதகுலத்திற்கு எதிரான மோசமான குற்றங்களை உண்மையிலேயே தடுக்கும் அளவிற்கு போதுமான ஏற்பாடுகள் உருவாக்கப்படும் என்ற நம்பிக்கையையும் இது அதிகரிக்கச் செய்கிறது. இத்தகைய குற்றங்களை இழைத்த குற்றவாளிகள் மீது பொறுப்புக்கூறலை அமுல்படுத்துவதற்காக, உலகில் எங்கும் உள்ள மனிதகுலத்தின் அடிப்படை கௌரவத்துக்கு எதிரான மீறல் வழக்குகளை உலக நாடுகளின் நீதிமன்றங்கள் விசாரணை செய்ய வேண்டும் என்ற கோட்பாட்டை உறுதிப்படுத்துவது .எதிர்காலத்தில் இனப்படுகொலை, இன சுத்திகரிப்பு போன்ற மோசமான குற்றங்களை இழைக்க முனைவோரை தடுத்து நிறுத்த உதவும்.

# இந்த நாட்டை சிங்கள அல்லது சிங்கள பௌத்த நாடு என்று கற்பனையிலும் கூற முடியாது

## விக்னேஸ்வரன் எம்.பி.

கேள்வி: அண்மையில் பாராளுமன்றத்தில் பயன்படுத்தப்பட்டிருந்த தமிழர் தாயகம், தமிழ்த் தேசியத்தலைவர் பிரபாகரன் ஆகிய வார்த்தைகள் ஹன்சார்டில் இருந்து நீக்கப்பட வேண்டும் என்று அரசாங்க உறுப்பினர்களால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. இது குறித்து சபாநாயகரின் கவனத்திற்கு கொண்டுசெல்வதாக அச்சமயம் அவைக்கு தலைமைதாங்கிய வேலுகுமார் எம்.பி. உறுதியளித்திருந்தார். எழுப்பப்பட்ட எதிர்ப்புகள் குறித்து அவர் எந்தத் தீர்மானமும் எடுக்கவில்லை. இந்த நாடு சிங்கள நாடு என்றும் பல அப்பாவிகளைக் கொன்று குவித்த பயங்கரவாதத் தலைவரின் பெயரை தேசிய மாவீரர் என்று குறிப்பிடக் கூடாது என்றும் நீங்கள் நினைக்கவில்லையா?

பதில்: இல்லை, நான் அப்படி நினைக்கவில்லை.

முதலாவதாக, இந்த நாடு சிங்கள நாடு அல்ல. இது சிங்கள பெரும்பான்மை நாடு. ஆனால் வடக்கு, கிழக்கில் தமிழ்ப் பேசும் மக்கள் பெரும்பான்மையாக உள்ளனர். 1833 க்கு முன்னர் ஆங்கிலேயர்கள் நாட்டை நிர்வாக நோக்கங்களுக்காக ஒன்றிணைத்தபோது வடக்கில் யாழ்ப்பாண இராச்சியம் இருந்தது மற்றும் கிழக்கில் தமிழர்களாக இருந்த தலைமைக்காரர்கள் கண்டிய மன்னருக்கு ஒரு பங்கினை வரியாகச் செலுத்தினர். கண்டியின் கடைசி மன்னர் ஒரு தமிழர் என்பது உங்களுக்குத் தெரியும். ஆங்கிலேயர்களுடன் 1815 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் அவர் தமிழில் கையெழுத்திட்டார். கண்டியத் தலைவர்கள் சிலரும் அவ்வாறே செய்தனர்.

இந்த நாட்டை சிங்கள நாடு என்றோ சிங்கள பௌத்த நாடு என்றோ கற்பனையில் உங்களால் கூற முடியாது. இது பெரும்பான்மையான சிங்கள மொழி பேசும் மற்றும் பெரும்பான்மையான தமிழ்ப் பேசும் பகுதிகளைக் கொண்டுள்ளது. 3000 ஆண்டுகளுக்கு முன் இந்நாட்டின் பூர்வீகக் குடிகள் தமிழ் பேசுபவர்கள். அப்போது சிங்கள மொழி எதுவும் தோன்றவில்லை. அதனால் சிங்களவர்கள் யாரும் அப்போது இருக்கவில்லை. சிங்கள மொழியானது முக்கியமாக தமிழ் மற்றும் பாளி மொழிகளின் கலவையாகும். சில சமஸ்கிருத சொற்கள் தமிழ் மொழி மூலம் சிங்கள மொழிக்குள் சென்றுள்ளன.

சிங்களவர்களின் முதல் இலக்கணமான 'சிதத் சங்கராவ ' எட்டு நூற்றாண்டுகளுக்கு முன்பு கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. 3000 வருடங்களுக்கு முன்னர் சிங்கள மொழி தோன்றியிருந்தால் அதன் இலக்கணம் பிறக்க 1700 வருடங்கள் ஆனது ஏன்?

மகாவம்சத்தை அடிப்படையாகக் கொண்டு சிங்கள மக்களுக்கு தவறான வரலாறு ஊட்டப்பட்டுள்ளது.மகாவம்சம் எழுதப்பட்டபோது சிங்கள மொழி தோன்றியிருக்கவில்லை . அதனால்தான் இது பாளி மொழியில் எழுதப்பட்டது. அந்த கத்தாவும் பாளி மொழியில் எழுதப்பட்டது. கி.பி. 5 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் சிங்களக் கல்வெட்டுகள் இருந்ததற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை. மகாவம்சம் பௌத்தத்தின் மகிமைக்காக எழுதப்பட்டது. ஒவ்வொரு சரணத்தின் முடிவிலும் ஆசிரியர் மகாநாமவே கூறுகிறார்.

கடந்த 73 வருடங்களில் சிங்கள அரசியல்வாதிகளும் சிங்கள புத்திஜீவிகளும் சிங்கள மொழி மற்றும் சிங்கள வரலாற்றை திரிபுபடுத்தும் வித்தையில் ஈடுபட்டுள்ளனர்.



'சிங்களவர்கள் தங்களை ஆரிய இனம் என்று குறிப்பிட முடியாது. அவர்கள் 1500 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு புதிய மொழியை ஏற்றுக் கொண்ட உள்ளூர் திராவிடர்கள். சிங்களவர்களும் தமிழர்களும் பொது வான வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் என்பது சமீபத்தில் நடத்தப்பட்ட DNA சோதனைகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது'

உத்தியோகபூர்வமாக இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள இடங்களின் தமிழ் பெயர்கள் கடந்த நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் மட்டுமே சிங்கள மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. உதாரணமாக, மணல் ஆறு (தமிழில்) என்று பல நூற்றாண்டுகளாக குறிப்பிடப்பட்ட மணலாறு , சுதந்திரத்திற்குப் பிறகு, வெலிஓயா (மணல்—வெலி / ஆறு—ஓயா—) என மொழிபெயர்க்கப்பட்டது. சில காலங்களுக்குப் பிறகு மொழிபெயர்ப்புகள் செய்யப்பட்ட பின்னர் பௌத்த மதகுருமார்களும் மற்றவர்களும் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ்ப் பகுதிகளையும் தமிழ் இடப்பெயர்களையும் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்ட பெயர்களால் குறிப்பிடத் தொடங்கினர்.

வடக்கு, கிழக்கில் உள்ள அந்த இடங்களின் பூர்விகப் பெயர்கள் சிங்கள மொழியில் இருந்ததாகவும் பின்னர் அந்த சிங்களப் பெயர்கள் கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் சோழர்களின் வெற்றிக்குப் பின்னர் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர் .கி.பி. 5 அல்லது 6 ஆம் நூற்றாண்டில் சிங்கள மொழி தோன்றியிருந்தால் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் இடங்களுக்கு சிங்களப் பெயர்கள் எப்படி இருந்திருக்கும்?

அண்மைக்கால உரைபெயர்ப்புகளுக்கு முன்னர் வடக்கு மற்றும் கிழக்கில் சிங்களப் பெயர்கள் இருந்ததற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை. பௌத்தத்தை சிங்களவர்களுடன் இணைத்து, பௌத்த அடையாளங்கள் எங்கெல்லாம் இருக்கிறதோ, அங்கெல்லாம் முதலில் சிங்களவர்கள் இருந்தனர் என்று கூறுவதன் மூலம் இப்படியான ஏமாற்று வேலைகளை அவர்கள் கையாண்டார்கள்.

இது ஒரு முழுமையான பொய்யாகும். பேராசிரியர் கனில் ஆரியரத்ன சில வருடங்களுக்கு முன்னர் தெமல பௌத்தயோ (தமிழ் பௌத்தர்கள்) என்ற பெயரில் ஒரு நூலை சிங்கள மொழியில் எழுதியுள்ளார். எமது வரலாற்றில் ஒரு கட்டத்தில் தமிழர்கள் பௌத்தர்களாக இருந்தனர் என்பதை அவர் ஏற்றுக்கொள்கிறார். அது சிங்கள மொழி வராத காலம். எனவே தெமல பௌத்தயோ இருந்தபோது சிங்களவர்கள் இல்லை.

சிங்கள இனரீதியான வரலாற்றாசிரியர்களும் மறைமுகமாக திட்டமிடும் பௌத்த மதகுருமாரும் கி.பி. 5 மற்றும் 6 ஆம் நூற்றாண்டுகளுக்கு முன்னர் சிங்கள இனம் இருந்ததை எவ்வாறு குறிப்பிடுகிறார்கள் என்பது பாளி மொழி சொற்களை குறிப்பிடுவதன் மூலமாகும்.பின்னர் பாளி மொழி சிங்கள மொழி உருவாக்கப்பட்ட பின்னர் அதற்குள் வந்தது. அந்த வார்த்தைகள் சிங்கள வார்த்தைகள் அல்ல பாளி வார்த்தைகளாகும். பிற்காலத்தில் பாளி மொழியிலிருந்து அந்தச் சொற்கள் சிங்கள மொழியை உருவாக்க புதிய மொழியில் வந்ததால், இந்த வரலாற்றாசிரியர்கள் கல்வெட்டுகள் மற்றும் பிற ஆதாரங்களில் உள்ள பாளி வார்த்தைகளை அடையாளம் காண்பதன் மூலம் சிங்கள மொழியின் இருப்பைக் குறிப்பிடுகின்றனர். ஆனால் அவை சிங்கள வார்த்தைகள் அல்ல. அவை பின்னர் சிங்கள மொழிக்கு வந்தவை.

3000 ஆண்டுகளுக்கும் மேலாக சிங்கள மொழி இருந்தது என்பது அவர்களின் வாதம். நான் என் தாத்தாவிலிருந்து வந்ததால் என் தாத்தா (நான் பிறப்பதற்கு நீண்டகாலத்திற்கு முன்பே இறந்தவர்) இருந்தபோது நான் இருந்தேன் என்று சொல்வது போல் இருக்கிறது!

இலங்கையை தமிழ் இந்து நாடு என்று குறிப்பிடுவதற்கான சகல நம்பகத்தன்மையும் உள்ளது. சைவத் தமிழர்கள் இந்தத் தீவின் பூர்வீகக் குடிகள். கீரிமலை (வடக்கில்) நகுலேஸ்வரம், சிலாபத்தில் முன்னேஸ்வரம் (மேற்கு), திருகோணமலையில் (கிழக்கு) கோணேஸ்வரம் மற்றும் டொந்திரவில் (தெற்கே) உள்ள தொண்டீஸ்வரம் ஆகிய இடங்களில் உள்ள சிவலிங்கங்கள் வரலாற்றுக்கு முந்தைய காலங்களிலிருந்து நாட்டைப் பாதுகாத்தன. கி.பி. 5 அல்லது 6 ஆம் நூற்றாண்டில் சிங்கள மொழி என்ற புதிய மொழியை ஏற்றுக்கொண்ட பூர்விக தமிழ் மக்களிடமிருந்து சிங்களவர்கள் வந்தவர்கள். அவர்களின் மொழி தமிழ், பாளி மற்றும் ஏனைய பேச்சுவழக்குகளின் கலவையாகும்.

நாட்டில் ஆரியப் படையெடுப்பு இருந்ததாக எந்தவொரு சரியான வரலாற்றாசிரியரும் இப்போது நம்பவில்லை. மேற்கு நாட்டவர்கள் எமது வரலாற்றை தவறாக புரிந்து கொண்டனர். ஆரியன் என்ற சொல் ஒரு இனத்தைக் குறிக்கவில்லை. எனவே சிங்களவர்கள் தங்களை ஆரிய இனம் என்று குறிப்பிட முடியாது.

அவர்கள் சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்பு காலப்போக்கில் ஒரு புதிய மொழியை ஏற்றுக்கொண்ட உள்ளூர் திராவிடர்கள். சிங்களவர்களும் தமிழர்களும் பொதுவான வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் என்பது சமீபத்தில் நடத்தப்பட்ட டி.என்.ஏ. சோதனைகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் இன்று புதிய மொழி அறிமுகமாகின்றது. இன்னும் 25 முதல் 50 வருடங்களில் தமிழும் ஆங்கிலமும் கலந்த புதிய மொழி என்பதால் அது தமிலிஷ் என அடையாளம் காணப்படலாம்!

மறுபுறம், இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு தமிழர் தாயகமாகும் (3000 ஆண்டுகளுக்கும் மேலாக). இதை 1987 இந்திய— இலங்கை ஒப்பந்தத்தில் இலங்கை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த விடயத்தைப் பற்றி நான் விரிவாக விளக்க வேண்டியதில்லை.

இப்போது தமிழ்த் தேசியத் தலைவர் பிரபாகரனுக்கு வருவோம்.

பிரபாகரன் ஒரு பயங்கரவாதி என்றால், ஆங்கிலேயருடன் போரிட்ட கெப்பிற்றிபொல திசாவயும் பயங்கரவாதியாகவே கருதப்பட வேண்டும். ஆனால் அவர் பெயரில் சிங்களவர்கள் வீதிகளைக் கட்டுவதும், கட்டிடங்களுக்கு அவர் பெயர் சூட்டுவதும், அவரை மாவீரன் என்று அழைப்பதும் ஏன்? கெப்பிற்றிபொலவை துரோகியாகவும் எதிரியாகவும் கருதியவர்கள் பிரித்தானியர்கள். சிங்களவர்கள் இன்றும் அவரை கதாநாயகன் என்றும் சிங்களவர்கள் மத்தியில் தலைவர் என்றும் அழைக்கிறார்கள்.

வடக்கு, கிழக்குத் தமிழர்கள் பிரபாகரனை பயங்கரவாதி என்றும் எதிரி என்றும் கூறவில்லை. அவர்கள் அவரை தங்கள் மீட்பர் மற்றும் தேசியத் தலைவர் என்று அழைக்கிறார்கள். உண்மை அதுதான்.

1956 இல் சிங்களவர்கள் சிங்களம் மட்டும் சட்டத்தை கொண்டுவந்த போது அது தமிழர்களுக்கு துரோகம் செய்யும் செயலாக இருந்தது.அவர்கள் ஏழு மாகாணங்களின் (சிங்களம்) பெரும்பான்மையான மொழியை(சிங்களம்) இரு மாகாணங்களின் (தமிழர்கள்) பெரும்பான்மை மீது திணித்தார்கள். சிங்களவர்கள் வன்முறையை ஆரம்பித்திருந்தனர்.

(06 ஆம் பக்கம் பார்க்க...)

வடக்கு,கிழக்கு தமிழர்கள் பிரபாகரனை பயங்கரவாதி என்றும் எதிரி என்றும் கூறுவதில்லை. அவரை இரட்சகர் என்றும் தேசிய தலைவர் என்றும் கூறுகின்றனர். அதுவே உண்மை. சிங்களவர்கள் 1956 இல் சிங்களம் மட்டும் சட்டத்தை கொண்டுவந்த போது அது தமிழர்களுக்கு துரோகம் செய்யும் செயலாக கருதப்பட்டது



# பாதிக்கப்பட்டவர்கள் எங்கிருந்தாலும் குரல் கொடுப்போம்

-சட்டத்தரணி சுகாஷ் தெரிவிப்பு-

மட்டக்களப்பு மாவட்டத்தில் உயிரிழந்த உறவுகளை நினைவு கூர்ந் தமைக்காக கைது செய்யப்பட்ட 10 பேரும் நேற்றைய தினம் புதன்கிழமை வாழைச்சேனை நீதவான் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளரும் சட்டத்தரணியுமான கனகரட்ணம் சுகாஷ் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த மே மாதம் 18ஆம் திகதி உயிரிழந்த உறவுகளை நினைவு கூருவதாக மட்டக்களப்பைச் சேர்ந்த 10 பேரை பொலிசார் கைது செய்து பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வாழைச்சேனை நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தனர்.

உயிரிழந்த உறவுகளை நினைவு கூருவதை எந்தச் சட்டத்தினாலும் தடுக்க முடியாது என கௌரவ மன்றுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் தமது பக்க நியாயங்களை தெரியப்படுத்தினோம்.

ஏழு மாத காலமாக கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பதற்காக சட்டப் போராட்டம் நடத்தினோம் எமது பக்க நியாயங்களை கேட்டறிந்த மன்று அவர்களை பிணையில் செல்வதற்கு அனுமதி வழங்கியது.

நமது சட்ட போராட்டத்திற்கு எம்மோடு கைகோர்த்த சிரேஷ்ட சட்டத்தரணி ரட்ணவேல், ஜெசிங்கம், மற்றும் நமது முஸ்லிம் சகோதர இனத்தைச் சேர்ந்த ரம்சி மற்றும் றிப்கான் ஆகியோருக்கு எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே பாதிக்கப்பட்ட தமிழன் எங்கிருந்தாலும் அவர்களுக்காக நீதி கிடைக்கத் தொடர்ந்தும் போராடுவோம் என்றார். (75)

# உந்துருளியில் இருந்து குதித்த பெண் படுகாயம்

நபர் ஒருவர் உந்துருளியில் ஏற்றிச் சென்ற பெண் ஒருவரிடம் தவறாக நடக்க முற்பட்டதனால் உந்துருளியில் இருந்து குறித்த பெண் குதித்ததில் படுகாயமடைந்து உள்ளார். இச்சம்பவம் கடந்த வாரம் பூநகரி 10ஆம் கட்டைச் சந்திக்கும் முக்கொம்பன் கிராமத்திற்கும் இடையில் இடம் பெற்றுள்ளது. காலையில் பூநகரி பிரதேச வைத்தியசாலைக்கு பேருந்தில் சென்றவர் திரும்பி பூநகரி 10ஆம் கட்டைப் பகுதியில் பேருந்துக்காக காத்து நின்றார். தனது பாலூட்டும் குழந்தை வீட்டில் இருந்தமையினால் அவசரமாக வீடு செல்ல வேண்டும் என்ற நிலையில் வீதியால் பயணித்த உந்துருளியினை மறித்து வீடு செல்ல முற்பட்ட போது உந்துருளியில் ஏற்றிய நபர் குறித்த பெண்ணிடம் தவறாக நடக்க முற்பட்டதனால் வேகமாக பயணித்த உந்துருளியில் இருந்து பெண் குதித்துள்ளார். இதன் போது முகம் உட்பட பல இடங்களில் படுகாயமடைந்து உள்ளார். உந்துருளியினை செலுத்திய நபர் தப்பி ஓடி விட்டார். வீதியால் சென்றவர்கள் குறித்த பெண் தொடர்பாக பூநகரி பிரதேச வைத்தியசாலையின் அம்புலன்சுக்கு தகவல் வழங்கப்பட்டு பூநகரி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பெண் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். குறித்த பெண் தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். குறித்த பெண்ணுக்கு ஏற்பட்ட நிலைவரம் தொடர்பாக கிளிநொச்சி ,யாழ்ப்பாணம் வைத்தியசாலைகளில் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டனர். (27)

# மறவர்குள புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

யாழ். ஈச்சமோட்டை மறவர்குள புனரமைப்பு பணிகள் நேற்றுயாழ் மாநகர முதல்வர் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனின் 'தூய நகரம்' திட்டத்திற்கு அமைவாக தியாகி அறக்கொடை நிறுவனத்தின் உரிமையாளரின் நிதியுதவியுடன் மறவன்குளம் துரித அபிவிருத்தித் திட்டம் மேற்கொள்ளப் படவுள்ளது .

நேற்றுக் காலை 10 மணியளவில் யாழ். மாநகர முதல்வரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அக்குளத்தின் மாதிரி திட்ட வரைபும் மக்கள் பார்வைக்காக வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாநகர சபை உறுப்பினர்கள், மாநகர சபை ஆணையாளர். மாநகர சபை உத்தியோகத்தர்கள், அப்பகுதி மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (40 ,18)

# ஆலயத்தின் வளர்ச்சிக்காக நிதி வழங்கி வைப்பு

முல்லைத்தீவு -கரைதுறைபற்று பிரதேச சபை உறுப்பினர் இ.கபாஸ்கரின் வேண்டுகோளுக்கிணங்க சுவிஸ் நாட்டில் வசிக்கும் ந.மதிவதனனால் 50,000.ரூபா நிதி குமுளமுனை ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தின் வளர்ச்சிக்காக வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பிரதேச சபை உறுப்பினரும் கலந்து கொண்டார். (27)

# முல்லைத்தீவு கடற்தொழிலாளர்களுக்கு வவுனியா மக்கள் நன்றி தெரிவிப்பு

கடந்த 05 ஆம் திகதி முல்லைத்தீவு கடலில் குளிக்க சென்று நீரில் மூழ்கி உயிரிழந்த வவுனியாவினை சேர்ந்த மூன்று இளைஞர்களின் உடலங்களையும் முல்லைத்தீவு கடற்தொழிலாளர்களின் முயற்சியினால் கடலில் இருந்து மீட்டு கொடுத்துள்ளமைக்கு வவுனியா மக்கள் சார்பாக நன்றிகளை தெரிவித்தனர்.

முல்லைத்தீவு கடற்தொழில் சம்மேளனத்திற்கு வவுனியா மக்கள் சார்பாகவும் இறந்த அந்த மூவரின் குடும்பம் ,நண்பர்கள் சார்பாகவும் மிகுந்த மதிப்பிற்குரிய மரியாதைக்குரிய நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். குறிப்பாக இரவு பகல் பாராமல் சடலத்தினை கண்டுபிடிப்பதற்கு உதவிய கள்ளப்பாடு மீன்பிடி சமாசத்திற்கு மீண்டும் ஒரு முறை நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இரவு வேளையில் மின்பிறப்பாக்கி மூலம் மின் ஒளிபாய்ச்சி சடலத்தினை தேடுவதற்கு உதவி செய்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் அத்தோடு படகினை தந்துதவிய நல்லுள்ளத்திற்கும் இணைந்து சடலத்தினை தேடுவதற்கு உதவிய அத்தனை நல்லுள்ளங்களுக்கும் இத்தருணத்தில் மனமுவந்து நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

கடலில் மூழ்கிய இளைஞர்களை தேடும் பணியில் 06.12.21 அன்று முல்லைத்தீவு வண்ணாங்குளம் கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்க கடற்தொழிலாளர்களின் 5 படகுகள் கடலில் இறங்கி தேடுதல் மேற்கொண்டும் மற்றும் முல்லைத்தீவு கரையோர கடற்தொழிலாளர்களின் முழுமையான பங்களிப்புடனுமே உயிரிழந்த மூன்று இளைஞர்களின் உடலங்கள் கடலில் இருந்து மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வேறு எந்த அரச நிர்வாகம் எவரும் இந்த இளைஞர்களின் உடலங்களை கடலில் தேடவில்லை கரையோரத்தில் பொலீசாரும் காத்திருந்துள்ளதுடன் உயிரிழந்தவர்களின் உடலங்கள் மாவட்ட மருத்துவமனை கொண்டுசெல்லப்பட்டு பொலீசாரின் விசாரணை அறிக்கை மற்றும் மரண விசாரணை அறிக்கைகள் என்பன துரிதமாக கிடைத்த காரணத்தினால் உயிரிழந்த இளைஞர்களின் உடலங்கள் வவுனியாவிற்கு கொண்டு சென்று அடக்கம் செய்யக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (15)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

வெளிவாரிப் பரீட்சைகளுக்கு தோற்றுவதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்தல்

* கலை முதற் தேர்வு, கலைமாணித் தேர்வு பகுதி - I, பகுதி - II (இறுதிச் சந்தர்ப்பம்)
  வணிக முதற் தேர்வு, இரண்டாம் தேர்வு I, மூன்றாம் தேர்வு, நான்காம் தேர்வு
* (புதிய பாடத்திட்டம்) (இறுதிச் சந்தர்ப்பம்)
  வணிக முதற் தேர்வு, வணிகமாணி - பகுதி - I, பகுதி - II,பகுதி - III,
  (பழைய பாடத்திட்டம்) (இறுதிச் சந்தர்ப்பம்)
* இசைமாணி / நடனமாணி முதலாம், இரண்டாம், மூன்றாம் , நான்காம் வருடத்தேர்வு
  (இறுதிச் சந்தர்ப்பம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் மேற்குறிப்பிட்ட வெளிவாரிப்பரீட்சைகளிற்கு (ஆண்டிறுதிப்பரீட்சை) தோற்றுவதற்காக குறித்த பட்டக்கற்கைநெறிகளுக்கு பதிவு செய்து இதுவரை பூர்த்திசெய்யாத மாணவர்களுக்கு இறுதிச்சந்தர்ப்பமாக இப்பரீட்சைகளினை நடாத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தீர்மானித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட தீர்மானத்திற்கு அமைவாக இறுதிச் சந்தர்ப்பமாக இப் பரீட்சைகள் காலாண்டு இடைவெளி அடிப்படையில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது அத்துடன் மாணவர்களின் நலன்கருதி மேற்படி பாடநெறிகளுக்கான துரிதமீட்டல் வகுப்புக்களை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இதற்கு தோற்றவுள்ள மாணவர்களின் எண்ணிக்கை, பாட அலகுகள், மீட்டல் வகுப்புகளிற்கான கட்டணம் மற்றும் பரீட்சைக் கட்டணம் என்பவை தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் முகமாக மேற்படி விபரங்களை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய இணையத்தளத்தில் இருந்து (www.cod.jfn.ac.lk) விண்ணப்பப்படிவங்களை பதிவிறக்கம் (download) செய்து திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். பதிவுத் தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் கீழ்க்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

பிரதிப் பதிவாளர்,
திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 31.12.2021 (வெள்ளிக்கிழமை) ஆகும். மேலும் மேற்குறிப்பிடப்பட்ட இப்பரீட்சைகள் எக்காரணத்திற்காகவும் மீண்டும் நடாத்தப்படமாட்டாது என்பதனையும் இம் மாணவர்களது கற்கைநெறிக்கான பதிவுகள் யாவும் இப்பரீட்சையின் பின்னர் காலாவதியாகும் என்பதனையும் அறியத் தருகின்றோம்.

மேலதிக தகவல்களுக்கு 021-222-3612 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

08.12.2021 பதிவாளர்



## பெறுகை அறிவித்தல்
## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## சபைநிதி - 2021

1. சபைநிதியின் ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட திட்ட கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்தும், வழங்குநர்களிடமிருந்தும் முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
4. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி வீதி மற்றும் கட்டடம் பொருத்தமான தரத்தில் இக்ராட்/சீடா (ICTAD /CIDA)பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் சுழிபுரத்தில் அமைந்துள்ள வலிகாமம் மேற்கு பிரதேச சபை (தொலைபேசி: 0212250144, தொலைநகல் : 0212250144, மின்னஞ்சல் valiwestps@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 14.00 மணி வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம், என்னும் இடத்தில் 09.12.2021 ம் திகதியிலிருந்து 23.12.2021 ம் திகதி வரை வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் பி.ப 14.00 வரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3000/= (வரிநீங்கலாக) இனை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
8. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம், என்னும் முகவரிக்கு 24.12.2021 ம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படவேண்டும். அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
9. கோரப்பட்ட வேலைகள் கேள்வி செல்லுபடியாகும் காலம் கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 63 (அறுபத்து மூன்று- 25.02.2022) நாட்களாகும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| தொ இல | வேலை விபரம் மற்றும் கேள்வி இல | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன் ரூபா) | ஒப்பந்தக்காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 1 | பொன்னாலை நீர் விநியோகத் திட்டம் திருத்த வேலை சுழிபுரம் NP/14/41(17)/02/CF/09/2021 | 0.357 Mn | 60 நாட்கள் | C9/C8 கட்டிடம் | 3600.00 | 25.03.2022 |
| 2 | தலைமை அலுவலக கட்டிட திருத்தமும் தண்ணீர்த் தாங்கி திருத்தமும் சுழிபுரம் NP/14/41(17)/02/CF/10/2021 | 3.499Mn | 60 நாட்கள் | C8/C7 கட்டிடம் | 35,000.00 | 25.03.2022 |
| 3 | சங்கரத்தை சந்தை புனரமைத்தல் வட்டுக் கோட்டை NP/14/41(17)/02/CF/11/2021 | 1.073Mn | 60 நாட்கள் | C9/C8 கட்டிடம் | 10,750.00 | 25.03.2022 |
| 4 | வட்டுக்கோட்டை பகுதி வீதிகள் புனர மைப்பு (பாடசாலை வீதி மிகுதி வேலை, அற்கின்சன் வீதி மிகுதிவேலை, உபவில் வீதி 1 ஆம் ஒழுங்கை மிகுதி வேலை, குளிப்பன் வீதி 3 ஆம் ஒழுங்கை மிகுதி வேலை, நொத்தாரிசு வீதி 1 ஆம் ஒழுங் கை மிகுதி வேலை, கனகரட்ணம் வீதி 1 ஆம் ஒழுங்கை மிகுதி வேலை) NP/14/41(17)/02/CF/12/2021 | 2.349Mn | 60 நாட்கள் | C8/C7 வீதிப் புனரமைப்பு | 23,500.00 | 25.03.2022 |
| 5 | சங்கானை பகுதி வீதிகள் புனரமைப்பு (சங்கரத்தை வீதி 3ஆம் ஒழுங்கை மிகுதி வேலை, ஓடக்கரை வீதி 3 ஆம் ஒழுங்கை மிகுதி வேலை, ஓடக்கரை வீதி 3ஆம் ஒழுங்கை கிளை வீதி மிகுதி வேலை, தொட்டிலடி கிளை ஒழுங்கை மிகுதி வேலை, கீரிமலை வீதி 1ஆம் ஒழுங்கை மிகுதி வேலை) NP/14/41(17)/02/CF/13/2021 | 1.46Mn | 60 நாட்கள் | C9/C8 வீதிப் புனரமைப்பு | 14,700.00 | 25.03.2022 |
| 6 | அராலித்துறை வீதி 5 ஆம், 7 ஆம் ஒழுங் கைகள் மிகுதி வேலை (வீதி) NP/14/41(17)/02/CF/14/2021 | 0.461Mn | 60 நாட்கள் | C9/C8 வீதிப் புனரமைப்பு | 4,700.00 | 25.03.2022 |
| 7 | சுழிபுரம் பகுதி வீதிகள் புனரமைப்பு (அம்மன் வீதி கிளை ஒழுங்கை மிகுதி வேலை. ஸ்ரீ கிருஸ்ணா வீதி மிகுதி வேலை ஆலமோடை வீதி மிகுதி வேலை காளுவன் வைரவர் வீதி தொல்புரம்) NP/14/41(17)/02/CF/15/2021 | 1.053Mn | 60 நாட்கள் | C9/C8 வீதிப் புனரமைப்பு | 10,600.00 | 25.03.2022 |

கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் 16.12.2021 அன்று பி.ப 14.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.

த.நடனேந்திரன்
தலைவர்,
பெறுகைக் குழு,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

09.12.2021

# மருத்துவ பீட மாணவன் மரணம் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்க நீதவான் உத்தரவு

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் மரணம் தொடர்பில் முன்கூட்டியே தகவல் வெளியானமை தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் பீட்டர் போல் கோப்பாய் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

மாதா கோவில் வீதி, துன்னாலை வடக்கு பகுதியைச் சேர்ந்த யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மூன்றாம் வருட மாணவனான சிதம்பரநாதன் இளங்குன்றன் என்பவர் வாடகைக்கு தங்கியிருந்து கல்வி கற்றுவந்த வன்னியசிங்கம் வீதி, கோண்டாவில் கிழக்கில் உள்ள வீட்டில் மர்மமான முறையில் தூக்கில் தொங்கிய நிலையில் கடந்த 17.11.2020 அன்று சடலமாக மீட்கப்பட்டார்.

இது தொடர்பான வழக்கு விசாரணை யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் பீட்டர் போல் முன்னிலையில் கடந்த 13.10.2020 அன்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சிரேஷ்ட சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா மரணமடைந்த மாணவன் சார்பில் மன்றில் ஆஜராகியிருந்தார். இதன்போது முன்கூட்டியே தகவல் வெளியானமை தொடர்பில் சந்தேகம் இருப்பதாகவும் ஒரு புலன் விசாரணையினை மேற்கொள்ளுமாறு மன்றில் கோரினார்.

முன்கூட்டியே தகவல் வெளியானமை தொடர்பில் கோப்பாய் பொலீசாரிடம் தகவல்களை வழங்குமாறு நீதவான் பணிப்புரை விடுத்திருந்தார். மீண்டும் விசாரணை நேற்று புதன்கிழமை எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் முன்கூட்டியே தகவல் வெளியானமை தொடர்பிலான தகவல்கள் பதியப்பட்டு உள்ளதாகவும் தொலைபேசி இரசாயன பகுப்பாய்வு அறிக்கை இன்னும் கிடைக்கப் பெறவில்லை எனவும் அதனை துரிதமாக பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் பொலிசார் மன்றில் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து தொலைபேசியின் இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கையை பெறுவதற்கு இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அறிவிப்பதாகவும் முன்கூட்டியே தகவல் வெளியானமை தொடர்பிலான அறிக்கையினை மன்றுக்கு சமர்ப்பிக்குமாறும் நீதவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (44)

# பரிசளிப்பு நிகழ்வு



உலக மண் தினத்தினை முன்னிட்டு எதிர்காலத்தை நோக்கி சுற்று சூழல் கழகமும் மாகாண கல்வி திணைக்களமும் இணைந்து நடத்திய பொது அறிவுப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குரிய பரிசளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் மாலை 2.30 மணியளவில் மாகாண கல்வி திணைக்கள மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

விவசாய பிரதி கல்வி பணிப்பாளர் திருமதி வேழினி பாலேந்திரா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மாகாண கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார், ஆசிரிய ஆலோசகர் ப. அருந்தவம், எதிர்காலத்தை நோக்கி சுற்றுசூழல் கழக தலைவர் லி.கேதீஸ்வரன். கழக செயலாளர் ம.சசிகரனும் கலந்துகொண்டு மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி வைத்தனர். (75)

# திறக்கப்பட்ட சிலிண்டர்களையும் மீளப் பெற வேண்டும்; அனுர

(பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்)

சமையல் எரிவாயு சிலிண்டர்களில் இரசாயன கலவையின் அளவில் மாற்றம் செய்யப்பட்டிருந்தமை உறுதியாகியுள்ளதுடன் அதனாலேயே வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக உறுதியாகியுள்ளதாக குறிப்பிட்டுள்ள ஜே.வி.பி தலைவர் அனுரகுமார திஸாநாயக்க இந்த விடயத்தில் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை கடந்த காலங்களில் கொள்வனவு செய்யப்பட்ட சிலிண்டர்களை மீளப் பெற்றுக்கொள்ளும் போது மூடிகள் திறக்கப்படாத மற்றும் பயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்படாத சிலிண்டர்களை மாத்திரமன்றி மூடிகள் அகற்றப்பட்ட சிலிண்டர்களையும் மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கைத்தொழில் வர்த்தக அமைச்சுகள் மற்றும் நான்கு இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அனுரகுமார திஸாநாயக்க இவ்வாறு கூறியுள்ளார்.

அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

கடந்த 6ஆம் திகதி முதல் நாட்டில் 430 எரிவாயு சிலிண்டர் வெடிப்பு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதுடன் அதனால் இரண்டு பேர் மரணம் அடைந்துள்ளதாக ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. எரிவாயு சிலிண்டர்களில் இடம்பெற்ற இரசாயன கலவையின் அளவில் இடம்பெற்ற மாற்றமே சிலிண்டர்கள் தீப்பற்ற காரணம் என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. அதனால் பூதாகாரமாகியுள்ள சமையல் எரிவாயு சம்பந்தமான பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்க அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் எரிவாயு சிலிண்டர் பிரச்சினைக்கு தீர்வாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையானது நிறுவனங்கள் மற்றும் வீட்டுப் பாவனைக்காக கொள்வனவு செய்யப்பட்டுள்ள எரிவாயு சிலிண்டர்களை மீள பெற்றுக் கொள்வதாக அறிவித்துள்ளது. ஆயினும் அந்த எரிவாயு சிலிண்டர் திறக்கப் படாமல் இருப்பது அவசியம் என கேட்டுக் கொண்டுள்ளது. அது எந்த வகையிலும் சாத்தியமாகாது. ஏனெனில் எரிவாயு சிலிண்டர்கள் வீட்டுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ உபயோகத்திற்காக எடுத்துச் செல்பவர்கள் அதனை உடனடியாகவே பாவனைக்கு எடுத்திருப்பார்கள் என்பதை நுகர்வோர் அதிகார சபை புரிந்து கொள்ள வேண்டும். அதனால் திறக்கப்பட்டிருக்கும் சிலிண்டர்களையும் மீள பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறு சிலிண்டர்கள் பாவிக்கப்பட்டிருந்தால் அந்த சிலிண்டர்களின் பாரத்தை நிறுத்துப்பார்த்து அதற்கான செலவை கழித்து சிலிண்டர்களை மீள பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இதேவேளை, அரசாங்கம் பொருட்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகளையும் மட்டுப்படுத்தலையும் அறிவித்துள்ளது ஆனால் அந்த அறிவிப்பு மக்கள் மத்தியில் தெளிவில்லாமல் உள்ளன. அது தொடர்பில் அரசாங்கம் மக்களுக்கு தெளிவுபடுத்துவது அவசியமாகும்.

துறைமுகத்தில் அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய பெருமளவு கொள்கலன்கள் தேங்கிக் கிடக்கின்றன. நீண்டகாலம் அவை துறைமுகத்தில் தேங்கிக் கிடப்பதால் பொருட்கள் பழுதடையும் நிலை ஏற்படலாம். அதனால் அவற்றை விடுவிப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்நிலையில் ஏதேனும் பிரச்சனைகள் என்றால் அமைச்சின் செயலாளர்கள் உள்ளிட்ட அமைச்சர்களின் மீது சுமத்த முயற்சிக்கின்றனர். அப்படியென்றால் மூன்றில் இரண்டு அதிகாரம் அமைச்சுப் பதவிகள் மற்றும் 20 ஆவது திருத்தம் என்பன எதற்கு என்று கேட்க வேண்டும் என்றார்.

# இலவச மருத்துவ முகாம்



வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், கிளிநொச்சி மாவட்ட செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த இலவச மருத்துவ முகாம் நேற்று பூநகரியில் இடம்பெற்றது.

நேற்றுக் காலை 9 மணியளவில் ஆரம்பமான குறித்த மருத்துவ முகாம் வாடியடி புனித மரியன்னை ஆலயத்தில் இடம் பெற்றது.

வடமாகாண ஆளுநரின் ஆலோசனைக்கு அமைவாக மத வழிபாட்டுத்தலங்களில் கடமை புரியும் மதகுருமார்கள் மற்றும் ஊழியர்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த நடமாடும் சேவையில் பொதுமக்களும் கலந்துகொண்டு சிகிச்சைகளையும், மருத்துவ ஆலோசனையையும் பெற்றனர். குறித்த நடமாடும் சேவைக்கான அனுசரணையை மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டு நிறுவனம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(55)

# விசேட கணபதி ஹோமமும் கூட்டுப் பிரார்த்தனையும்

கொரோனாத் தொற்று முற்று முழுதாக நீங்கி நாட்டு மக்கள் அனைவரும் நலம் பெற வேண்டி விசேட கணபதி ஹோமமும், கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வும் இன்று காலை-09 மணி முதல் குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும்.

குறித்த நிகழ்வில் கோப்பாய் சுப்பிரமுனிய கோட்ட முதல்வர் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாத சுவாமிகள், கந்தர்மடம் வேதாந்தமட பீடாதிபதி ஸ்ரீ வேதவித்தியாசாகர் சுவாமிகள் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். மேற்படி நிகழ்வில் அடியவர்கள் அனைவரும் கொரோனா சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கலந்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (18)

# விவசாயிகளுக்கு மின் மோட்டர்கள் வழங்கி வைப்பு



கைதடி கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 27 விவசாயிகளுக்கு நேற்று முன்தினம் மின் மோட்டர்கள்(நீர் இறைக்கும் இயந்திரங்கள் )வழங்கப்பட்டது.

வேர்ல்ட் விஷன் நிறுவனத்தின் அனுசரணையுடன் கொள்வனவு செய்யப்பட்ட மின் மோட்டர்களை பாராளுமன்ற உறுப்பினரும்,மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதனின் பிரத்தியேக செயலாளர் சதாசிவம் இராமநாதன் பயனாளிகளிடம் வழங்கி வைத்திருந்தார்.

குறித்த நிகழ்வில் கைதடி கமநல சேவை திணைக்களத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் வாகீசன், சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் தி.தங்கவேல்,கமநலசேவை நிலைய உத்தியோகத்தர்கள்,பயனாளிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (13)

# பத்மநாதனின் நினைவு சங்கமம் நிகழ்வு

அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஸ்தாபகரும், முன்னாள் நீண்டகால தலைவருமான அமரர் பத்மநாதனின் நினைவுச் சங்கமம் நிகழ்வு எதிர்வரும் 12ஆம் திகதி பிற்பகல் 02 மணிக்கு அரியாலை மயிலு மீனாட்சி நினைவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது

இந் நிகழ்வு அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் . சு. சண்முகரட்ணத்தின் தலைமையில் நடைபெறவுள்ளதுடன் கொவிட் - 19 சுகாதார விதிகளுக்கு அமைய அனைவரையும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது (53)

# வெடிகுண்டு மீட்பு



யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அரியாலை - புங்கன் குளம் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து சிறிய ரக மோட்டார் குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை வீட்டு உரிமையாளரால் குப்பைகளை புதைப்பதற்காக கிடங்கு ஒன்று தோண்டிய சமயத்திலே அதற்குள்ளிருந்து இந்த குண்டு மீட்கப்பட்டது.

இதனையடுத்து தகவலறிந்து வந்த யாழ்ப்பாணம் பொலிஸார் நீதிமன்ற உத்தரவை பெற்று குண்டை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (40)

# ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய உண்டியல் உடைத்து திருட்டு



முல்லைத்தீவு -ஒட்டுசுட்டான் பகுதியில் அமைந்துள்ள வரலாற்று சிறப்பு மிக்க ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் உண்டியல் உடைக்கப்பட்டு திருடப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இரவு பதிவாகியுள்ளது.

ஆலயம் பாதுகாப்பாக பூட்டப்பட்ட வேளை மணிகோபுரம் ஊடாக ஏறி ஆலயத்திற்குள் இறங்கிய திருடன் ஆலய மண்டபத்தில் மூலவருக்கு நேராக வைக்கப்பட்ட உண்டியலை எடுத்துக்கொண்டு வைரவர் சன்னிதிக்கு அருகில் உள்ள ஓடையில் இரும்பு கம்பியால் உடைத்து உண்டியலில் உள்ள பணத்தைத் திருடிக்கொண்டு சென்றுள்ளான். ஆலயத்தில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரிவி கமராவில் திருடனின் வருகை பதிவாகியுள்ளது.

இந்த சம்பவம் குறித்து ஒட்டுசுட்டான் ஆலய நிர்வாகத்தினர் ஒட்டுசுட்டான் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்கள் பொலீசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளார்கள்.

தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் இராஜகோபுர கட்டுமான பணிகள் நடைபெற்று வரும் இந்த வேளையில் கொள்ளைச் சம்பவம் பதிவாகியுள்ளதுடன் கடந்த ஒருமாதகாலமாக உண்டியலில் உள்ள பக்தர்களின் காணிக்கைகள் எடுத்துக் கொள்ளளப்படவில்லை என நிர்வாகம் தெரிவித்துள்ளது. (15)

## இந்த நாட்டை ...

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அவர்கள் 1956 இல் தமிழ்த் தலைவர்களை மோசமாக நடத்தி பேரை ஏரியில் வீசினர். சிங்கள அரசியல்வாதிகள் 1958 இல் தமிழர்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டு, தமிழ்ப் பெண்களை கற்பழிக்கவும், கைக்குழந்தைகள் உட்பட தமிழர்களைக் கொல்லவும், கொழும்பிலும் தீவின் பிற பகுதிகளிலும் தமிழர்களுக்குச் சொந்தமான சொத்துக்களை எரிக்கவும் சிங்களவர்களைத் தூண்டினர். சிறிமாவோ பண்டாரநாயக்க தனது உறவினரான கேணல் உடுகமவை வடக்கில் கிளர்ச்சியை அடக்க 1961 இல் அனுப்பினார். தமிழர்களுக்கு எதிராக இயற்றப்பட்ட நியாயமற்ற 'சிங்களவர்கள் மட்டும் சட்டம்' மற்றும் ஏனைய பாரபட்சமான சட்டங்களுக்கு எதிராக வடக்கு மற்றும் கிழக்கில் தமிழர்கள் ஆர்ப்பாட்டம் செய்த போது, அவர்களின் செயற்பாடுகள் 'கிளர்ச்சி ' என்று குறிப்பிடப்பட்டது. தொடர்ச்சியான தீய செயற்பாடுகளில் கடைசியாக பாரபட்சமான சட்டம், உயர்கல்விக்கான பல்கலைக்கழக நுழைவுத் தேர்வுக்கான தரப்படுத்தல் திட்டமாகும். இதன் பின்னரே தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினர். ஆயுதம் ஏந்திய அவர்கள், ஏறக்குறைய 30 ஆண்டுகளாக சிங்கள ஆயுதப் படைகளுடன் மோதலில் ஈடுபட்டனர் . இது தமிழர்கள் தங்கள் இளமைப் பருவத்தில் பெருமிதம் கொள்ளும் விடயம்.

இறுதியாக இலங்கை இராணுவத்திற்கு ஆதரவாக 22 நாடுகள் பங்கேற்புதான் பிரபாகரனையும் விடுதலைப் புலிகளையும் முடிவுக்குக் கொண்டுவந்தது. பிரபாகரனை தமிழ் இனத்தின் தலைவர் என்று தமிழர்கள் அழைப்பதில் என்ன தவறு? அவர்கள் அவரை சிங்கள தெற்கின் தலைவர் என்று கூறவில்லை! ஹன்சார்டில் இருந்து பிரபாகரனின் பெயரை நீக்குமாறு சிங்கள எம்.பி.க்கள் எவ்வாறு கோர முடியும் ?

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒரு நபர் பயங்கரவாதியா இல்லையா என்பதை யார் தீர்மானிப்பது? எந்தவொரு சுயாதீனமான, சர்வதேச, தொழில்முறை விசாரணைக் குழுவானது சந்தேகத்திற்கு இடமின்றி இலங்கைப் படைகளை பயங்கரவாதிகள் என்று குறிப்பிடும்.

அரசாங்கம் கூறுவது போல் அவர்கள் தமிழர்களை பாதுகாக்கவில்லை. தமிழர்களையும், அவர்களின் சொத்துக்களையும், கலாசார மரபுச் சின்னங்களையும் அழித்தார்கள். அரிய கையெழுத்துப் பிரதிகள் உட்பட 95,000 நூல்களைக் கொண்டிருந்த தென்கிழக்காசியாவிலேயே சிறந்ததாக இருந்த யாழ்ப்பாண நூலகத்தை எரித்தவர்கள் அவர்கள்தான்.

பிரபாகரனால் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டார்களென தமிழர்களின் வாழ்வில் அவ்வளவுக்கு அக்கறை கொண்டவர்கள் போல் சிங்களவர்கள் சொல்கிறார்கள். ஜே.வி.பி. கலவரத்தின் போதும் போரின் போதும் துரோகிகளாகவும் எதிரிகளாகவும் கருதப்பட்ட சிங்களவர்களை சிங்களத் தலைவர்கள் கொன்றனர். முறையான சுதந்திரமான சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட்டால் குற்றவாளிகள் யார் என்பது தெரியவரும். அவர்களின் பல கொலைகள் புலிகள் மீதும் அதன் தலைவர் மீதும் சுமத்தப்பட்டன.

எவருடைய வன்முறையையும் நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும், அரசியல் கொலையாளிகள் நிறைந்த நாட்டிலிருந்து, மற்றவர்களை விட்டுவிட்டு ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவரை பயங்கரவாதியாக சித்தரிப்பது எனக்கு வேடிக்கையாகவிருக்கிறது.

சிங்களவர்களில் கெப்பிற்றிபொல திசாவே போன்ற கொலையாளிகள் இப்போது தலைவர்கள் மற்றும் மாவீரர்கள் என்று அழைக்கப்படுவதைப் போல, சிங்களவர்களையும் மற்றும் தமிழர்கள் மத்தியில் அவர்களின் கூட்டாளிகளையும் எதிர்த்து போராடிய தமிழர்களின் இறுதி நோக்கம் சிங்கள மேலாதிக்கத்திலிருந்து விடுவிப்பதே என்பதை கருத்தில் கொண்டு சுதாநாயகர்கள் என்று அழைக்கமுடியும் என்பதில் சந்தேகம் இல்லை . கெப்பிற்றிபொல தனது மக்களின் விடுதலையை விரும்பினார். பிரபாகரனும் அப்படித்தான்.

தமிழர்களில் உள்ள தியாகிகளையும், மாவீரர்களையும் பொருத்தமான நாளில் நினைவுகூருவதில் தவறில்லை. நவம்பர் 21 ஆம் திகதி தொடங்கி 27 ஆம் திகதி வரையிலான வாரத்தை தியாகிகள் வாரமாக தமிழர்கள் நிர்ணயம் செய்துள்ளனர்.

நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்
பாராளுமன்ற உறுப்பினர்
யாழ்ப்பாண மாவட்டம்
டெய்லி மிரர்

# இலங்கைக் கடற்பரப்பிலிருந்து வெளியேறிய சீன உர கப்பல்

சர்ச்சையை உருவாக்கியிருந்த சீன உர கப்பல் இலங்கை கடற்பரப்பிலிரு ந்து வெளியேறியுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மேன்முறை யீட்டு நீதிமன்றில் கூறியுள்ளார்.

இலங்கையில் வணிக அனுமதிப் பத்தி ரத்தை பெற்றுக் கொள்ளாமையி னாலேயே, சீன உரத்தை ஏற்றிய கப்பல், இலங்கை கடற்பரப்பிலிருந்து வெளியேறியுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கை உர நிறுவனம், சீன உர நிறு வனத்திற்கு மின்னஞ்சல் ஊடாக இது குறித்து அறிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். சீன உர நிறுவனத்திற்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக சீன தூதர், கடிதமொன்றின் ஊடாக தமக்கு அறிவித் துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டு ள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சீனாவிலிருந்து உரம் ஏற்றிக்கொண்டு இலங்கை கடற்பரப்பிற்கு வருகை தந்த கப்பல் தொடர்பில், கடந்த காலங்களில் அதிகளவில் பேசப்பட்ட நிலையில், தற் போது அந்த கப்பலுக்கு என்ன நேர்ந்தது என்பது குறித்து பலரும் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

இந்த கப்பலில் தீங்கு விளைவிக்கும் பக்டீரியாக்கள் உள்ளதாக தெரிவித்து, அந்த கப்பலில் கொண்டு வரப்பட்ட விவசாய உர த்தை இலங்கை தொடர்ச் சியாக நிராகரித்து வந்தது. இதைய டுத்து, விவசா ய உரத்தை ஏற்றி வந்த கப்பல் இலங்கை கடற்பரப்பில் சுமார் 70 நாட்கள் இருந்த நிலையிலேயே, தற்போது அந்த கப்பல் இலங்கை கடற் பரப்பிலிருந்து மாயமாகியுள்ளது. இவ் வாறு மாயமான கப்பல் எங்கே சென்றது என்பது குறித்து தற்போது பலரும் கேள்வி எழுப்பி வருகின்றனர். இலங்கையினால் நிராகரிக் கப்பட்ட சீன செயற்கை விவ சாய உரத்தை ஏற்றிய கப்பலான ஹிப்போ ஸ்பிரிட் கப்பல், தற்போது சிங்கப்பூர் நோக்கி பயணித்து வருகிறது. கடல்மார்க் கத்தை வெளியிடும் இணையத்தளங்களின் தரவுகளில், எதிர்வரும் 10 ம் திகதி இந்த கப்பல் சிங்கப்பூரைச் சென்றடையும் என தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை கடற்பரப்பிற்குள் சுமார் 70 நாட்களாக நிலை கொண்டிருந்த இந்த கப் பல், கடந்த 4 ஆம் திகதி சிங்கப்பூர் நோக்கி தனது பயணத்தை ஆரம்பித்துள்ளது.

மத்தியஸ்தம் செய்வது மற்றும் மாதிரி களை வழங்கும் நோக்கில் இந்த கப்பல் சி ங்கப்பூர் நோக்கி பயணிப்பதாக செயற்கை உரத்தை இலங்கைக்கு அனுப்பிய சீனா வின் சிந்தவோசிவின் பயோடெக் நிறு வனம் தெரிவிக்கின்றது. தமக்கு ஏற் பட்ட நட்டத்திற்காக சீனாவின் சிந்தவோ சிவின் பயோடெக் நிறுவனம், மத்தியஸ்த சபையின் ஊடாக 8 மில்லியன் டொலர் நட்டஈட்டை கோரியுள்ளது.

வரையறுக்கப்பட்ட வணிக உர நிறுவ னத்திடமிருந்தே இந்த நட்டஈடு கோரப்பட் டுள்ளது. செயற்கை உரத்தை கொள்வனவு செய்யும் உடன்படிக்கையை இலங்கை அரசாங்கம் மீறியுள்ளதாக சிந்தவோசிவின் பயோடெக் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், உரத்தின் பெறுமதி, கப்பல் கட்டணம், மத்தியஸ்தத்திற்காக செலவிடப்படும் கட்டணம் மற்றும் வட்டி ஆகியன உள்ளடங்கலாகவே இந்த நட்ட ஈடு கோரப்பட்டுள்ளது.

# இந்திய விஜயத்தின் நோக்கத்தை பசில் சபையில் தெளிவுபடுத்துவார்

நிதி அமைச்சர் பசில் ராஜபக் ஸவின் இந்திய விஜயத்தின் நோக்கம் என்ன என்பதையும், இந் திய விஜயத்தில் அரசாங்கத்தின் சாதக நிலைமைகள் குறித்து வரவு செலவு திட்டத்தின் இறுதிநாள் விவாதமான நிதி அமைச்சின் விவா தத்தின்போது அமைச்சர் பசில் ராஜ பக்ஸ முழுமையாக தெளிவுபடுத்த வுள்ளாராம்.

அரசாங்கத்தின் வரவு செலவு திட்ட த்தின் விவாதங்களை புறக்கணித்து நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஸவின் இந்தியா சென்றதற்கான காரணம் என்ன வென ஐக்கிய தேசிய கட்சி யின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சிலர் கேள்வி எழுப்பியுள்ள நிலையில், எதிர்வரும் 10 ஆம் திகதி நிதி அமைச்சுக்கான விவா தத்தில் இந்திய விஜயத்தின் நோக் கம் என்ன என்பதையும், அங் கு இடம்பெற்ற முக்கிய சந்திப்புகள் மற்றும் இலங்கையின் பொருளா தார வேலைத்திட்டங்களில் முன் னெடுத்துள்ள இரு தரப்பு இணக்கப் பாடுகள் என்ன என்பது குறித்தும் நிதி அமைச்சர் பஷில் ராஜபக்ஸ வினால் தெளிவுபடுத்தவுள்ளதாக அரச தரப்பினர் நேற்று சபையில் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் அமைச்சர வையிலும் நிதி அமைச்சர் இந்த விடயங்களை முன்வைத்துள்ளது டன், நேற்றும் ஜனாதிபதி மற்றும் பிரதம ருடன் இந்த விடயங்களை கலந்துரையாடியுள்ளார்.

ஆகவே அதற்கமைய வரவு செலவு திட்டத்தின் இறுதிநாள் விவாதத்தில் நிதி அமைச்சர் இந்திய விஜயத்தின் நோக்கத்தை தெளிவுப டுத்தவுள்ளாராம்.

## துயர் பகிர்கின்றோம்

அமரர்

## இராமலிங்கம் பொன்னம்பலம்

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி.ரேணுகா வசீகரன் அவர்களின் அன்புத் தந்தையார் அமரர் இராமலிங்கம் பொன்னம்பலம் அவர்கள் கடந்த 07.12.2021 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துயரில் பங்குகொள்ளும்,
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை,
பருத்தித்துறை.

# கோட்டை ரயில் நிலையத்திற்கு முன் வாகன நெரிசல்

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன் அமைந் துள்ள வீதியில் நேற்று நண்ப கல் கடும் வாகன நெரிசல் ஏற் பட்டிருந்ததாக கூறப்படுகிறது. துறைமுகம், பெற் றோலியம் மற்றும் மின்சார சபை ஊழியர்களினால் முன் னெடுக்கப்படும் எதிர்ப்பு ஆர்ப்பாட்ட பேரணி கார ணமாக இவ்வாறு வீதியின் ஒரு மருங்கில் முழுவதுமாக போக்குவரத்து பாதிக்கப்பட் டுள்ள தாக பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

## வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை பதிவுசெய்தல்- 2022
## வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை

2022ஆம் ஆண்டில் சபைக்கு பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் பொருட்டு பதிவுசெய்து கொள்வதற்கு விரும்பும் தகைமை வாய்ந்த வழங்குநர்கள் ஒப்பந்ததாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன

**வழங்கல்கள்**

1. அலுவலக உபகரணங்கள்/தளபாடங்கள் /உருக்குவீட்டு உபகரணப்பொருடகள்/ பிளாஸ்ரிக்பொருட்கள்.
2. காகிதாதிகள் மற்றும் எழுதுபொருட்கள்.
3. மின்சார உபகரணங்கள் மற்றும் தெருவிளக்கு உபகரணங்கள்.
4. கொங்கிறீட் பொருட்கள்/ ஹியூம் குழாய்கள்/சீமெந்துக் கற்கள்.
5. ரயர் வகைகள்/ ரியூப் வகைகள் / பற்றிவகை.
6. வாகனம், இயந்திரங்களின் உதிரிபாகங்கள் மற்றும் துணைப்பொருட்கள்.
7. கணணிகள் மற்றும் கணணி துணைப்பொருட்கள்.
8. புகைப்படப்பிரதி இயந்திரம்/தொலைநகல்இயந்திரம்/ரோணியோஇயந்திரம்/டுப்ளோஇயந்திரம்.
9. நூலக நூல்கள்.
10. சீமெந்து/கண்ணாடிஉற்பத்திகள்/அலுமினியவேலைகள்/ இரும்புஉட்படகட்டடப்பொருட்கள்.
11. அறிவித்தல் பலகைகள் /பதாதைகள் /பெனர் /ஸ்டிக்கர்.
12. துடைப்பம்/விளக்குமாறு/தும்புத்தடி/தூரிகைகள்/சிறியகால் துடைப்பங்கள்/கழுவும் திரவங்கள்.

**சேவைகள்**

1. அனைத்து வகையான அச்சுவேலைகள்.
2. அலுவலக தளபாடத் திருத்தவேலைகள்.
3. கணணிதுணைப்பாகங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேவிஸ் செய்தல்.
4. மோட்டார் வாகன திருத்த வேலைகள் /சேவிஸ் செய்தல்.
5. பதாதைகள் மற்றும் பெயர்ப்பலகைகள் வரைதல்/தயாரித்தல்/அச்சடித்தல்
6. இறப்பர் முத்திரைதயாரித்தல்.
7. டியூப் ஒட்டுதல், இரயர்களுக்கு திரிவைத்தல்,இரயர்களை மீளநிரப்புதல்,இரயர்களை மாற்றுதல் போன்ற சேவைகள்.
8. நிர்மாண ஒப்பந்த வேலைகள்

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி இல. 212241130 மூலமாகவோ அறிந்து கொள்ளலாம்.

**பொதுநிபந்தனைகள்**

1. பதிவு செய்துகொள்ளும் அனைத்து வழங்குநர்களும் ஒவ்வொரு அம்சத்தின் பொருட்டும் வெவ்வேறான விண்ணப்பங்களைசமர்ப்பித்தல்வேண்டும்.அத்துடன்வியாபாரப்பதிவுச்சான்றிதழின்பிரதியையும்சமர்ப்பித்தல் வேண்டும்.

பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு பதிவு செய்துகொள்ளும் நிர்மாண ஒப்பந்ததாரர்

| | |
|---|---|
| 01. 50 000.00 ரூபாவரை | 500.00 |
| 02. 50 000.00 ரூபாமுதல் 1500 000.00 வரை | 1500.00 |
| 03. 1500 000.00 ரூபாமுதல் 2000 000.00 வரை | 2000.00 |
| 04. 2000 000.00 ரூபாக்குமேல் | 2500.00 |

ஏனையோர் ஒவ்வொரு அம்சத்திற்கும் தனித்தனியாக 500.00 ரூபா கட்டணத்தையும் செலுத்தவேண்டும்

2.) தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் பதிவுசெய்து கொண்டுள்ள வழங்குநர்களிடம் விலைமனுக்கள் கோரப்படும் என்பதுடன் இதற்குப் புறம்பான வழங்குநர்களிடமிருந்தும் விலைமனுக்களைக் கோருதல் மற்றும் கொள்வனவு செய்யும் உரிமையும் வேறுபெறுகை செயற்பாடுகளைக் கையாளும் உரிமை சபையைச் சார்ந்தது.

3. இந்தச் சபையினால் வழங்கல் கட்டளை பிறப்பிக்கட்டப்பட்டு உரியகாலத்தில் பொருட்கள்சேவையை வழங்கத் தவறினால் முன்னறிவித்தலின்றி வழங்கல் கட்டளை இரத்துசெய்து அடுத்த வழங்குநருக்கு கட்டளை அனுப்பப் படும் என்பதைகவனத்தில் கொள்ளவும். குறித்தகாலத்தில் தரமானபொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற் குத் தவறும் வழங்குநர்கள்/ஒப்பந்தகாரர்களின் பெயர்கள் பதிவேட்டிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு பட்டியலில் சேர்க்கப்படும்.

4. தபால்மூலம் விண்ணப்பிப்பதாயின் ''செயலாளர், வலிகாமம் வடக்கு பிரதேசசபை'' என்னும் பெயருக்கு வரை யப்பட்ட காசோலை மூலம் அல்லது வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் 7573141 இலங்கை வங்கி காங் கேசன்துறை கணக்கு இலக்கத்திற்கு வைப்புச்செய்து வைப்புச் சீட்டு மற்றும் விண்ணப்பப்படிவத்தினை பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

5. எல்லா விண்ணப்பங்களும் 2021.12.28 ஆந் திகதி பி.ப 2.00 மணிக்கு அல்லது அதற்குமுன் தவிசாளர், வலிகாமம் வடக்குபிரதேச சபை காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) என்ற முகவரிக்கு கிடைக்கும் வண்ணம் பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக வலிகாமம் வடக்கு பிரதேச சபை, தலைமைஅலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம். கடிதஉறையின் இடதுபக்கமேல் மூலையில் ''2022 வருடத்திற்கான வழங்குநர் மற்றும் ஒப்பந்ததாரர்களை பதிவு செய்தல்'' என்று பதிவுசெய்தல் வேண்டும்.

வலிகாமம் வடக்குபிரதேச சபை
காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

திரு.சோ.சுகிர்தன்.
தவிசாளர்,

# யாழ்ப்பாணம் மாநகர சபை

**சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், சிற்றுண்டிச் சாலைகள், பல்பொருள் வாணிபக்கடைகள் (நாவாந்துறை), ஒலிபரப்புச் சேவைகள் என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான**

## மீள் கேள்வி அறிவித்தல் - 2022 (01.01.2022 - 31.12.2022)

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2022 ம் திகதி முதல் 31.12.2022 ம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட மீள்கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா 1,000.00
கேள்விப் படிவம் விநியோகித்தல் - 09.12.2021 - 22.12.2021 . (மு.ப 9.00 - பி.ப.3.00 மணி வரை)
கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல்- 23.12.2021 மு.ப 10.00 மணி வரை
கேள்வி திறத்தல் - 23.12.2021 மு.ப 10.00 மணிக்கு

விண்ணப்பபடிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

விண்ணப்ப படிவங்களை சமர்ப்பிப்பவர்கள் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 23.12.2021 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.

| இல | இறைச்சிக்கடை, பல்பொருள் வாணிபம் | கடை இல. | மீளளிக்கக் கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 213,100.00 |
| 2 | பண்ணை கருவாட்டுக்கடை | இல.02 | 5,000.00 | 49,629.87 |
| 3 | பண்ணை கோழிக்கடை | இல.07 | 5,000.00 | 826,956.00 |
| 4 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 100,500.00 |
| 5 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 970,600.00 |
| 6 | செங்குந்தா கருவாட்டுக்கடை | இல.01 | 5,000.00 | 154,691.00 |
| 7 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 311,000.00 |
| 8 | செங்குந்தா கோழியிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 417,819.00 |
| 9 | செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 607,340.70 |
| 10 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 681,074.45 |
| 11 | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 160,000.00 |
| 12 | நாவாந்துறை கோழிக்கடை | இல.10 | 5,000.00 | 438,050.00 |
| 13 | அரியாலை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 63,206.67 |
| 14 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000.00 | 632,950.00 |
| 15 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 525,100.00 |
| 16 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 7,000.00 | 500,175.00 |
| 17 | குருநகர் பன்றி இறைச்சிக்கடை | | 5,000.00 | 350,728.00 |
| 18 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.04 | 5,000.00 | 305,414.55 |
| 19 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.05 | 5,000.00 | 271,479.60 |
| 20 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.07 | 5,000.00 | 190,884.10 |
| 21 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.08 | 5,000.00 | 169,802.02 |
| 22 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.09 | 5,000.00 | 188,593.49 |
| 23 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.11 | 5,000.00 | 56,332.02 |
| 24 | நாவாந்துறை கடை(பல்பொருள் வாணிபம்) | இல.12 | 5,000.00 | 9,792.35 |

**சிற்றுண்டிச்சாலைகள், பொதுச்சந்தைகள் மீள் கேள்வி - 2022**

| இல | துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்கள் சிற்றுண்டிச்சாலைகள் பொதுச்சந்தை | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ள கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| 1 | செங்குந்தா சந்தை | 10,000.00 | 7,536,000.00 |
| 2 | நாவாந்துறை மீன்சந்தை | 10,000.00 | 606,000.00 |
| 3 | பாசையூர் மீன்சந்தை | 2,000.00 | 360,000.00 |
| 4 | பண்ணை கடற்கரைப்பூங்கா சிற்றுண்டிச்சாலை | 15,000.00 | 1,500,000.00 |
| 5 | யாழ். பழைய பூங்கா சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 425,612.00 |
| 6 | யாழ். பொது நூலக சிற்றுண்டிச்சாலை | 5,000.00 | 261,819.00 |
| 7 | துரையப்பா விளையாட்டு அரங்கத்தில் நிகழ்வு களின் போது நடாத்தப்படும் சிற்றுண்டிச்சாலை (நாள் ஒன்றிற்கான கட்டணம்) | 1,000.00 | 11,461.19 |

**விளம்பர ஒலிபரப்புச்சேவைகள் குத்தகைக்கு 2022.01.01 - 31.12.2024 (மூன்று வருடம்)**

| இல | ஒலிபரப்பு விபரம் | கேள்வி அடையாள இலக்கம் | மதிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைமுறை விபரம் | |
|---|---|---|---|---|---|
| | | | | தொகை ரூபா | செலுத்திவிருக்கும் காலம் |
| 1 | நவீன சந்தைகட்டிடத்தொகுதி மேல்மாடி | MC/N.M.B/F-08/B.01/2021 | 1.5 மில்லியன் (1,500,000.00) | 30,000.00 | 09.02.2022 |
| 2 | செங்குந்தா சந்தைத் தொகுதியில் மீன்சந்தைக்கு மேல் | MC/S.M/F-08/B.02/2021 | 0.5 மில்லியன் (500,000.00) | 10,000.00 | 09.02.2022 |

மேலதிக தகவல்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியுடன் தொலைபேசி இலக்கம் 0212225978 தொடர்புகொண்டு அல்லது அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப 3.00 மணிவரை நேரடியாகச் சமுகமளித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர், பெறுகைக் குழு
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

## -டாக்கா டெஸ்ட் போட்டி-

# சஜித் கான் அபார பந்து வீச்சு; பாகிஸ்தான் இனிங்ஸ் வெற்றி





வங்காளதேசத்திற்கு எதிரான 2 ஆவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் வீரர் சஜித் கான் சிறப்பாக பந்துவீசி 12 விக்கெட் வீழ்த்த பாகிஸ்தான் பங்களாதேஷ் அணியை இனிங்ஸ் மற்றும் 8 ஓட்டங்களால் வீழ்த்தி வெற்றிபெற்றது.

வங்காளதேசம், பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 2 ஆவது டெஸ்ட் போட்டி டாக்காவில் இடம்பெற்றது. நாணயச்சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

முதல் நாள் முடிவில், பாகிஸ்தான் அணி 57 ஓவரில் 2 விக்கெட்டுக்கு 161 ஓட்டங்கள் எடுத்திருந்த போது மழை குறுக்கிட்டதால் ஆட்டம் முடிவுக்கு வந்தது. அசார் அலி 36 ஓட்டம், கப்டன் பாபர் அசாம் 60 ஓட்டம்; எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இரண்டாவது மற்றும் மூன்றாவது நாளிலும் மழையால் ஆட்டம் கடுமையாக பாதிப்பு அடைந்தது. பாகிஸ்தான் அணி 2 விக்கெட்டுக்கு 188 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அசார் அலி 52, பாபர் அசாம் 71 ஓட்டத்திலும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்நிலையில், நான்காம் நாள் ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. அசார் அலி 56, பாபர் அசாம் 76 ஓட்டத்திலும் ஆட்டமிழந்தனர். . அடுத்து இறங்கிய பவாத் ஆலம், ரிஸ்வான் ஜோடி பொறுப்புடன் ஆடியது. இருவரும் அரை சதமடித்தனர். இந்த ஜோடி 103 ஓட்டங்கள் சேர்த்தது. பாகிஸ்தான் அணி 4 விக்கெட்டுக்கு 300 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் டிக்ளேர் செய்தது. ஆலம் 50, ரிஸ்வான் 53 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர். வங்காளதேசம் சார்பில் தைஜுல் இஸ்லாம் 2 விக்கெட் வீழ்த்தினார்.

இதையடுத்து, வங்காளதேசம் முதல் இன்னிங்சை ஆடியது. பாகிஸ்தான் அணியின் சஜித் கான் துல்லியமாக பந்து வீசினார். இவரது பந்து வீச்சில் நிலைகுலைந்த வங்காளதேசம் விரைவில் விக்கெட்டுகளை இழந்து தத்தளித்தது. நான்காம் நாள் முடிவில் வங்காளதேசம் முதல் இன்னிங்சில் 87 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. தொடர்ந்து இரண்டாவது இனிங்ஸை பங்களாதேஷ் அணியை ஆடுமாறு பணித்தது பாகிஸ்தான்.

இரண்டாவது இனிங்ஸில் முதல் மூன்று விக்கெட்டுக்கள் சொற்ப ஓட்டத்தில் இழக்க ஷகிப்அல்ஹசன் 63, முஷ்ரபிரகீம் 48, லிற்றன் டாஸ் 45 ஓட்டங்கள் எடுத்தனர். ஏனையவர்கள் குறைந்த ஓட்டத்தில் விழ பங்களாதேஷ் 205 ஓட்டத்துக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதன் மூலம் பாகிஸ்தான் இனிங்ஸ் மற்றும் 8 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. சஜித் கான் முதல் இனிங்ஸில் 8 விக்கெட்டுக்களும் இரண்டாவது இனிங்ஸில் 4 விக்கெட்டுக்களும் வீழ்த்தி ஆட்டநாயகனாக தெரிவானார்.

## 4 விக்கெட்டுகளினால் கண்டியை வென்றது காலி கிளாடியேட்டர்ஸ்



லங்கா பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் காலி கிளாடியேட்டர்ஸ் அணி, கண்டி வோரியர்ஸை நான்கு விக்கெட்டுகளினால் வீழ்த்தியுள்ளது.

2021 லங்கா பிரீமியர் லீக் டி-20 கிரிக்கெட் தொடரின் ஐந்தாவது போட்டி கொழும்பு, ஆர்.பிரேமதாச மைதானத்தில் அஞ்சலோ பெரேரா தலைமையிலான கண்டி வோரியர்ஸ் மற்றும் பானுக ராஜபக்ஷ தலைமையிலான காலி கிளாடியேட்டர்ஸ் அணிகளுக்கு இடையில் ஆரம்பமானது.போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற கண்டி வோரிஸர்ஸ் முதலில் துடுப்பெடுத்தாடுவதற்கு களமிறங்கி, முதல் விக்கெட்டினை எதுவித ஓட்டங்களும் இன்றி இரண்டாவது பந்து வீச்சுக்கே பறிகொடுத்தது. அதன்படி கெனார் லூயிஸ் டக்கவுட்டுடன் சமித் படேலின் பந்து வீச்சில் ஆட்டமிழக்க, அடுத்து வந்த சரித் அசலங்கவும் 6 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

இதனால் அணியின் முதல் இரண்டு விக்கெட்டுகளும் 16 ஓட்டங்களுக்குள் வீழ்த்தப்பட்டது.பின்னர் மூன்றாவது விக்கெட்டுக்காக கமிந்து மெண்டிஸ் - அஹமட் ஷெஹ்சாத் ஆகியோர் ஜோடி சேர்ந்து கண்டி அணியை மீட்டெடுத்தனர். அணி 99 ஓட்டங்களை பெற்றிருந்த வேளையில் தனஞ்சய லக்ஷானின் பந்து வீச்சில் பென் டன்கிடம் பிடிகொடுத்து கமிந்து மெண்டிஸ் 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அவரின் ஆட்டமிழப்பினை அடுத்து வந்த அஞ்சலோ பெரேரா (10), ரோவ்மன் பவல் (01), ஆகியோர் குறைந்த ஓட்டங்களை பெற்று வெளியேற கண்டி வோரியர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 144 ஓட்டங்களை குவித்தது.145 என்ற இலக்கை துரத்திய காலி கிளாடியேட்டர்ஸுக்கு தனுஷ்க குணதிலக்க - குசல் மெண்டிஸ் நல்லதொரு ஆரம்பத்தை பெற்றுக் கொடுத்தனர்.அதன்படி இவர்கள் முதலாவது விக்கெட்டுக்காக 61 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டனர்.

பின்னர் குசல் மெண்டிஸ் 16 ஓட்டங்களுடன் தனுஷ்க குணதிலக்க 45 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க அடுத்தடுத்து வந்த மொஹமட் ஹபீஸ் (13), பென் டன்க் (3), பானுக ராஜபக்ஷ (22) மற்றும் சமித் படேல் (4) ஆகியோரின் விக்கெட்டுகள் குறைந்த ஓட்டங்களுக்குள் வீழ்ந்தது.

எனினும் லஹிரு மதுசங்க மற்றும் தனஞ்சய லக்ஷானின் 7 ஆவது விக்கெட்டுக்கான இணைப்பாட்டத்தினால் நான்கு பந்துகள் (19.2) மீதமிருந்த நிலையில் வெற்றியிலக்கை கடந்தது காலி கிளாடியேட்டர்ஸ்.

போட்டியின் ஆட்ட நாயகனாக 2 விக்கெட்டுகள் மற்றும் 10 ஓட்டங்களை பெற்ற தனஞ்சய லக்ஷான் தெரிவானார்.

## இலங்கை பெண்கள் கால்பந்தாட்ட அணியில் 4 யாழ்.மாணவிகள்



பங்களாதேஷில் நடைபெறவுள்ள 19 வயதுக்குட்பட்ட தெற்காசிய பெண்கள் கால்பந்தாட்டப் போட்டியில் பங்குபற்றும் இலங்கை அணியில் தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி மாணவிகள் நால்வர் இடம்பெறுகின்றனர். பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, நேபாளம், இலங்கை ஆகிய 5 நாடுகள் இப் போட்டியில் பங்குபற்றுகின்றன. இப்போட்டியில் பங்குபற்றும் இலங்கை அணியினர் நேற்று காலை பங்களாதேஷை சென்றடைந்துள்ளனர். இலங்கை அணியில் மகாஜனா கல்லூரியைச் சேர்ந்த சிவநேஸ்வரன் தர்மிகா, உருத்திரகுமார் யோகிதா, ரகுதாஸ் கிருசாந்தினி, மரியநாயகம் வெலன்டினா ஆகியோர் இடம் பெறுகின்றனர். அவர்களில் தர்மிகா உதவி அணித் தலைவர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை பெண்கள் கால்பந்தாட்ட வரலாற்றில் வட மாகாணத்தைச் சேர்ந்த வீராங்கனை ஒருவர், 19 வயதுக்குட்பட்ட இலங்கை பெண்கள் அணியின் உதவித் தலைவராக நியமிக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

அத்துடன் இவ்வணியின் பொறுப்பாசிரியையாக மகாஜனா கல்லூரி கால்பந்தாட்ட அணியின் பொறுப்பாசிரியை பத்மநிதி செல்லையா நியமிக்கப்பட்டுள்ளமை மற்றொரு விசேட அம்சமாகும்.







**வேலைக்கு ஆட்கள் தேவை**

கொழும்பில் இயங்கி வரும்
பிரபல்யமான கால்நடை தீவனம்
நிறுவனத்திற்கு வடமாகாணத்திற்கான
விற்பனை பிரதிநிதி
(Rep) தேவை

**தொடர்புகளுக்கு:**
T.P - 0770162810


## நியூஸிலாந்து சுற்று பயணத்தில் பங்களாதேஷுடன் ரங்கன ஹேரத்



நியூசிலாந்தில் நடைபெறவுள்ள இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் போது, சுழல் பந்து ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ள ரங்கன ஹேரத் பங்களாதேஷ் அணியில் இணையவுள்ளார். அதேநேரம் ஹேரத்துடன் நீண்ட கால ஒப்பந்தத்தில் ஈடுபட உள்ளதாகவும் பி.சி.சி அக்ரம் குறிப்பிட்டார். நியூஸிலாந்து - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி ஜனவரி முதலாம் திகதி டவுரங்காவில் உள்ள பே ஓவல் மைதானத்தில் நடைபெற உள்ளது. இரண்டாவது டெஸ்ட் போட்டி ஜனவரி 9 ஆம் திகதி தொடங்குகிறது.

இதற்கிடையில், ஷகிப் அல் ஹசனுக்குப் பதிலாக வரவிருக்கும் சுற்றுப்பயணத்திற்கான 18 பேர் கொண்ட அணியில் ஃபசில் மஹ்மூத் ரப்பியை சேர்த்துள்ளதாக அக்ரம் மேலும் கூறினார்.

## -ஆஷஸ் முதல் டெஸ்ட் போட்டி-

# அவுஸ்திரேலியாவின் அபார பந்து வீச்சில் 147 ஓட்டங்களில் சுருண்டது இங்கிலாந்து





அவுஸ்திரேலியா- இங்கிலாந்து அணிகள் இடையே நடைபெறும் ஆஷஸ் டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலியா அணி கப்டன் கம்மின்ஸ் 5 விக்கெட்டுகளை கைப்பற்ற 147 ஓட்டங்களால் சுருண்டது இங்கிலாந்து அணி. அவுஸ்திரேலியா- இங்கிலாந்து அணிகள் இடையே நடைபெறும் ஆஷஸ் டெஸ்ட் தொடர் மிகவும் முக்கியத்துவம் பெற்றதாகும். 5 போட்டி கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக ஜோரூட் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியா சென்று உள்ளது. அவுஸ்திரேலியா- இங்கிலாந்து அணிகள் மோதும் ஆஷஸ் முதல் டெஸ்ட் போட்டி பிரிஸ்பேனில் நேற்று தொடங்கியது. நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. அவுஸ்திரேலிய வீரர்களின் அபாரமான பந்து வீச்சினால் இங்கிலாந்து விக்கெட்டுகளை இழந்து திணறியது.

ஆட்டத்தின் முதல் பந்திலேயே ஸ்டார்க் விக்கெட்டை கைப்பற்றி சாதித்தார். ரோரி பர்ன்ஸ் முதல் பந்தில் ஓட்டம் எதுவும் எடுக்காமல் வெளியேறினார். அதைத் தொடர்ந்து டேவிட் மலான் 6, கப்டன் ஜோரூட் ஓட்டம் எதுவும் எடுக்காமலும் ஹசில் வுட் பந்தில் பெவிலியன் திரும்பினார்கள்.

11 ஓட்டத்தில் இங்கிலாந்து 3 விக்கெட்டை பறிகொடுத்தது. கப்டன் கம்மின்ஸ் தனது அபாரமான பந்து வீச்சினால் பென் ஸ்டோக்ஸ் (5), ஹசீப் ஹமீது (25) ஆகியோரை வெளியேற்றினார். 60 ரன்னில் 5 விக்கெட்டை அந்தஅணி இழந்தது. 6 ஆவது விக்கெட்டான ஆலிவர் போப்-ஜோஸ் பட்லர் ஜோடி சிறிது தாக்குப்பிடித்து ஆடியது. இந்த ஜோடியை ஸ்டார்க் பிரித்தார். பட்லர் 39 ஓட்டத்தில் வெளியேறினார்.

ஆலிவர் போப் 35 ஓட்டத்தில் கிரீன் பந்தில் ஆட்டம் இழந்தார். 8 ஆவது விக்கெட்டாக ஆலிவர் ராபின்சன் ஓட்டம் எதுவும் எடுக்காமல் கம்மின்ஸ் பந்தில் ஆட்டம் இழந்தார். இங்கிலாந்து அணி 122 ஓட்டங்களுக்கு 8 விக்கெட் இழந்து பரிதாப நிலையில் இருந்தது. ஸ்கோர் 144 ஆக இருந்த போது 9 ஆவது விக்கெட்டாக மார்க் வுட் அவுட் ஆனார். அவர் 8 ஓட்டம் எடுத்தார்.இங்கிலாந்து அணி 50.1 ஓவர்களில் 147 ஓட்டத்தில் சுருண்டது. கடைசி விக்கெட்டாக கிறிஸ் வோக்ஸ் 21 ஓட்டத்தில் வெளியேறினார்.கம்மின்ஸ் 5 விக்கெட்டும், ஸ்டார்க், ஹசில் வுட் தலா 2 விக்கெட்டும், கேமரூன் கிரீன் ஒரு விக்கெட்டும் கைப்பற்றினார்கள்.

## 85 ஆண்டுகளுக்கு பிறகு மிச்சல் ஸ்டார்க் சாதனை

ஆஷஸ் டெஸ்ட் தொடர் வரலாற்றில் 85 ஆண்டுகளுக்கு பிறகு முதல் பந்திலேயே விக்கெட் கைப்பற்றி ஸ்டார்க் சாதனை புரிந்து உள்ளார். ஆஷஸ் டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலிய வேகப்பந்து வீரர் ஸ்டார்க் ஆட்டத்தின் முதல் பந்தில் இங்கிலாந்து வீரர் ரோரி பர்ன்சை ஆட்டமிழக்கச் செய்தார்.ஆஷஸ் டெஸ்ட் தொடர் வரலாற்றில் 85 ஆண்டுகளுக்கு பிறகு முதல் பந்திலேயே விக்கெட் கைப்பற்றி ஸ்டார்க் சாதனை புரிந்து உள்ளார்.

1936 ஆம் ஆண்டு ஆஷஸ் டெஸ்ட் தொடரில் முதல் பந்தில் விக்கெட் கைப்பற்றப்பட்டு இருந்தது.

அவுஸ்திரேலிய வேகப்பந்து வீரர் மெக்ரோமிக், இங்கிலாந்து வீரர் வொர்த்திக்டெனை பிரிஸ்பேனில் முதல் பந்தில் அவுட் செய்தார்.

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 09 ஆம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ஆதாரமற்ற பொய் குற்றச்சாட்டுக்களை சுமத்தும் இலங்கை ஆசிரியர் சங்கம்

## -கடும் கண்டனம் வெளியிடும் சந்திரகாந்தன்-



இலங்கை ஆசிரியர் சங்கம் தன்மீதும் தனது கட்சியின் மீதும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளமைக்கும் அறிவு, நாணயமற்ற வார்த்தைப் பிரயோகங்களை பயன்படுத்தியுள்ளமைக்கும் வன்மையான கண்டனங்களை தெரிவித்துக்கொள்வதாக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் சிவநேசதுரை சந்திரகாந்தன் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த அறிக்கையில் மேலும், மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்தில் பணிபுரியும் உதயரூபன் ஆசிரியரை இடம் மாற்றக்கோரி கடந்த திங்கட்கிழமை குறித்த பாடசாலை முன்றலில் ஓர் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளதாக எனக்கு அறியக் கிடைத்தது.

மேற்படி உதயரூபன் தனது பணி சார்ந்து இது வரை 41 குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளவர் என தெரியவருகின்றது. அது மட்டுமன்றி, தனது இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் என்னும் தகமையினை அக் குற்றச்சாட்டுகளில் இருந்து தப்பிப்பதற்கான கேடயமாக அவர் பயன்படுத்தி வருகின்றாரா ? என்னும் கேள்வி கல்விச்சமூகத்தைச் சேர்ந்த பலராலும் எழுப்பப்பட்டு வருகின்றது.

அவர்மீது மாவட்டத்திலுள்ள கல்வித்திணைக்கள மேலதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலைதொடருகின்றது. இந்நிலையில்தான் உதயரூபன் ஆசிரியரை இடம்மாற்றக்கோரி மேற்படி ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது என நான் கருதுகின்றேன்.

அதன்காரணமாகவே பெற்றோர்களும், பழையமாணவர்களும் பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறைகொண்டு செயற்படும் நலன்விரும்பிகளும் உதயரூபனை இடமாற்றக்கோரி பாடசாலை முன்பாக கவனயீர்ப்பு நிகழ்வு ஒன்றை நடத்தியுள்ளனர் என புரிந்து கொள்ள முடிகின்றது.

ஜனநாயக ரீதியான அந்த ஆர்ப்பாட்டத்தை எதிர்கொள்ள முடியாத உதயரூபன் ஆசிரியர் குறித்த பிரச்சினைகள் மீது எவ்வித சம்பந்தமும் அற்ற என்னுடைய பெயரையும் எனது கட்சியின் பெயரையும் பயன்படுத்தி, விடயங்களை திசைதிருப்பி தன்மீதான குற்றச்சாட்டுகளில் இருந்து தப்பிக்க முயல்வதாக நான் கருதுகின்றேன்.

மேற்படி ஆர்ப்பாட்டம் குறித்து உதயரூபன் ஆசிரியர் வழங்கிய தகவல்களின் அடிப்படையில்தான், இலங்கை ஆசிரியர் சங்கம்கூட உதயரூபன் ஆசிரியருக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தின் பின்னணியில் நானும் எனது கட்சியும் இருப்பதாக ஆதாரமற்ற குற்றஞ்சாட்டுக்களை முன்வைத்துள்ளது.

மேற்படி குற்றச்சாட்டுகளை நான் முற்றாக மறுக்கின்ற அதேவேளை, உள்ளூர் உண்மை நிலைமைகளை அறிந்துகொள்ளாமல் எவ்வித ஆதாரமற்ற பொய்யான தகவல்களைக் கொண்டு ஒரு தேசிய ரீதியான ஆசிரியர் சங்கமானது அறிக்கைகளை விடுவதென்பது பொறுப்பற்ற செயலாகும்.

அத்தோடு பல முறை மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு மக்கள் பிரதிநிதியை அவமரியாதைக்குள்ளாக்கும் வண்ணம் தெருச்சண்டை பாணியில் ஒரு தேசிய ஆசிரியர் சங்கம் தகாத வார்த்தைப்பிரயோகங்களை பயன்படுத்தி அறிக்கை விடுவதென்பது ஒரு மோசமான முன்னுதாரணமுமாகும்.

ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை என்மீதும் எனது கட்சியின் மீதும் சுமத்தியுள்ளமைக்கும் அறிவு, நாணயமற்ற வார்த்தைப்பிரயோகங்களை அவ்வறிக்கையில் பயன்படுத்தியுள்ளமைக்கும் இலங்கை ஆசிரியர் சங்கத்துக்கும் எனது வன்மையான கண்டனங்களை தெரிவித்துக்கொள்ளுகின்றேன். மேலும் என்னையும் நான் தலைமை தாங்கும் கட்சியின் நற்பெயரையும் களங்கப்படுத்தியமைக்காக உரிய சட்டநடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தீர்மானித்துள்ளேன் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# 26 நாட்களுக்கு தேவையான கச்சா எண்ணெய் சேமிப்பில்

## -உதய கம்மன்பில தகவல்-



தொடர்ந்தும் கச்சா எண்ணெயை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

26 நாட்களுக்கு தேவையான கச்சா எண்ணெய் ஏற்கனவே சேமித்து வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

தற்காலிகமாக மூடப்பட்டிருந்த சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு அமைச்சர் உதய கம்மன்பில இதனைத் தெரிவித்தார்.

மேலும், 700,000 பீப்பாய்கள் கச்சா எண்ணெயை இறக்குமதி செய்ய 59 மில்லியன் டொலர்கள் செலவிட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

# வேலைதேடி வெளிநாடு செல்வோர் எண்ணிக்கை மீண்டும் அதிகரிப்பு

இவ்வருடத்தில் பதிவு செய்யப்பட்ட வெளிநாடு செல்லும் பணியாளர்களின் எண்ணிக்கை 100,000 ஐ கடந்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

சராசரியாக, ஒவ்வொரு வருடமும் 200,000க்கும் அதிகமான இலங்கையர்கள் வேலைவாய்ப்புக்காக வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். எனினும், கடந்த வருடம் இந்த எண்ணிக்கை 53,000 ஆகக் குறைவடைந்திருந்தது.

கொவிட்-19 தொற்று பரவல் காரணமாக ஏற்பட்ட சிக்கல்களால் இந்த வீழ்ச்சி ஏற்பட்டதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

# எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மீதான அச்சுறுத்தல் சம்பவங்கள்

## -ஆராய விசேட குழு நியமனம்-

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மீதான அச்சுறுத்தல் சம்பவம் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க விசேட குழுவொன்றை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நியமித்துள்ளார்.

இது குறித்த அறிவிப்பை சபாநாயகர் நேற்று சபையில் வைத்து வெளியிட்டுள்ளார்.

பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தலைமையிலான இந்த குழுவில் அமைச்சர்கள் சமல் ராஜபக்ச , பந்துல குணவர்தன , வாசுதேவ நாணயக்கார , இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ,எம்பிக்களான .கயந்த கருணாதிலக்க , ரவூப் ஹக்கீம் , விஜித்த ஹேரத் , ரஞ்சித் மத்துமபண்டார , சுமந்திரன் , அனுர பிரியதர்ஷன யாப்பா ஆகியோர் உறுப்பினர்களாவர். அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகவும் ,எம்.பிக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டுமெனவும் சபாநாயகர் கேட்டுக்கொண்டார்.

# பிரியந்த குமாரவை காப்பாற்ற முயன்றவரை கௌரவித்தார் பிரதமர் இம்ரான் கான்



பிரியந்த குமாரவை காப்பாற்ற முயன்ற மாலிக் அட்னானுக்கு பிரதமர் இம்ரான் கான் பாராட்டுச் சான்றிதழை வழங்கியுள்ளார்.

மதத்தின் பெயரால் வன்முறையில் ஈடுபடுபவர்களை அரசாங்கம் விட்டுவைக்காது என்பதை வலியுறுத்தி, பிரியந்த குமாரவை கொலை செய்யாமல் காப்பாற்ற முயன்ற மாலிக் அட்னானுக்கு, பிரதமர் இம்ரான் கான், பாராட்டுச் சான்றிதழை நேற்று முன்தினம் வழங்கியுள்ளார்.


பிரதமர் அலுவலகத்தில், இலங்கை பிரஜை பிரியந்த குமாரவுக்கு இரங்கல் தெரிவிக்கும்போது, மாலிக் அட்னானின் துணிச்சல் நம் அனைவருக்கும் ஒரு எடுத்துக்காட்டு என்று பிரதமர் கூறியுள்ளார்.

குறித்த நிகழ்வில் உரையாற்றிய பிரதமர், நாட்டில் முன்மாதிரிகள் முக்கியம், ஏனென்றால் மக்கள் அவர்களைப் பின்பற்றுகிறார்கள். உடல் சக்தியை விட தார்மீக சக்தி பெரியது.

மேலும் அந்த மிருகங்களுக்கு எதிராக மாலிக் அட்னான் நின்ற விதத்தை, நமது இளைஞர்கள் நினைவில் வைத்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

இதேவேளை, அவரது குடும்பம் அவரது மாதச் சம்பளத்தை தொடர்ந்து பெறும் என்று சியால்கோட்டின் வணிக சமூகம் என்னிடம் உறுதியளித்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டில் 10 இலட்சத்திற்கும் அதிகமானோருக்கு மூன்றாம் தடுப்பூசி



நாட்டில் பைஸர் மூன்றாம் கொவிட்-19 தடுப்பூசி செலுத்தி கொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை 10 இலட்சத்தை கடந்துள்ளதாக தொற்று நோய் விஞ்ஞான பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் மட்டும் 37,578 பேருக்கு பைஸர் மூன்றாம் தடுப்பூசி செலுத்தப்பட்டதை அடுத்து இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

நாட்டில் நேற்று முன்தினம் 40,347 பேருக்கு கொவிட்-19 தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளதாகத் தொற்று நோய் விஞ்ஞான பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், 755 பேருக்கு பைஸர் முதலாம் தடுப்பூசியும், 313 பேருக்கு இரண்டாம் தடுப்பூசியும் செலுத்தப்பட்டன. அதேநேரம், 409 பேருக்கு சைனோபாம் முதலாம் தடுப்பூசியும், 1,238 பேருக்கு இரண்டாம் தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளதாகத் தொற்று நோய் விஞ்ஞான பிரிவு தெரிவித்துள்ளது.

# மருதமுனை கடற்கரையில் உருக்குலைந்த சடலம் மீட்பு



உருக்குலைந்த நிலையில் மருதமுனை கடற்கரை பிரதேசத்தில் சடலம் ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை பிரதேச செயலகத் துக்குட்பட்ட மருதமுனை பொலிஸ் பிரிவில் நேற்று புதன்கிழமை காலை குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கு அமைய ஸ்தலத்துக்கு வருகை தந்த பொலிஸார் சடலம் குறித்து ஆரம்பக்கட்ட விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அத்துடன் சடலம் மீட்கப்பட்ட மருதமுனை கடற்கரை பகுதிக்கு பொலிஸாரால் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இம்மரணம் தற்கொலையா அல்லது கொலையா என்ற கோணத்தில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். மேலும் குறித்த சடலம் அடையாளம் காண முடியாத நிலையில் உருக்குலைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அண்மைக்காலமாக நாடு பூராகவும் உள்ள கடற்கரைப்பகுதிகளில் உருக்குலைந்த நிலையில் சடலங்கள் கரையொதுங்கி வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.


## வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம் வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2022

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்திற்கு 2022 ஆம் ஆண்டு பொருட்கள், வேலைகள் மற்றும் சேவைகள் வழங்குவதற்கு தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்ப படிவங்கள் மற்றும் விபரப்பட்டியலை நகராட்சிமன்ற கணக்கு கிளையில் ரூபா 500.00 இனைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப படிவங்கள் 23.12.2021 இற்கு முன்னர் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்திற்கு கிடைக்குமாறு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

செயலாளர்
நகராட்சி மன்றம்,
வல்வெட்டித்துறை.

09.12.2021.



## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில் 2022ம் ஆண்டிற்கான 2வது தடவை மீள்கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்காணும் சந்தை மற்றும் இறைச்சிக்கடைகள், என்பவற்றை 01.01.2022ம் திகதி தொடக்கம் 31.12.2022ம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் : 10.12.2021 - 20.12.2021 திங்கட்கிழமை பி.ப 2.00 மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி : 21.12.2021 செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணி வரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 21.12.2021 செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணிக்கு
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் : கலந்துரையாடல் மண்டபம், தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை.

2022 ஆம் ஆண்டுக்கு சந்தை மற்றும் இறைச்சிக் கடைகளுக்கான குத்தகை அட்டவணை

| இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா |
|---|---|---|---|---|
| நல்லூர் உப அலுவலகம் | | | | |
| 1 | திருநெல்வேலிச்சந்தை (துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன்) | 1,000.00 | 15,000.00 | 29,326,044.00 |
| 2 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல01. | 500.00 | 5,000.00 | 110,250.00 |
| 3 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல02. | 500.00 | 5,000.00 | 139,350.00 |
| கொக்குவில் உப அலுவலகம் | | | | |
| 4 | கொக்குவில் சந்தை கோழியிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 405,000.00 |
| 5 | கோண்டாவில் ஸ்ரேசனடி ஆட்டிறைச்சிக் கடை இல 02 | 500.00 | 5,000.00 | 128,350.00 |
| 6 | கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 1,692,300.00 |
| 7 | கோண்டாவில் ஸ்ரேசனடி மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 5,000.00 | 800,200.00 |

1. கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியுட்பட இரு பிரதிகளை தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5,கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு, தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். மூன்றாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும்.
2. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை 2021.12.28ம் திகதி பி.ப2.00 மணிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
3. நாளொன்றுக்கு சந்தையில் தள வாடகையாக (வியாபாரிகளுக்கென ஒதுக்கப்பட்ட இடம்) ரூபா 80/= மட்டுமே அறவிடப்பட முடியும்.
4. துவிச்சக்கரவண்டிக்கு ரூபா 5/= மோட்டார் சைக்கிளுக்கு ரூபா 10/= உம் மட்டுமே பாதுகாப்புக் கட்டணமாக அறவிடப்படல் வேண்டும்.
5. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

2021.12.08

திரு ப.மயூரன் தவிசாளர்,
நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.

# பாவனையின் பின்னர் வீசப்படும் பேனைகள்

-சுற்றுச்சூழலுக்கு பாரிய பாதிப்பு என எச்சரிக்கை-



பாடசாலைகள் மற்றும் அலுவலகங்களில் பயன்படுத்திய பின்னர் வீசப்படும் பேனைகளால் சுற்றுச்சூழலுக்கு பாரிய பாதிப்புகள் ஏற்படுவதாகவும், இது தொடர்பாக விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர சபையில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சுற்றாடல் அமைச்சு ,வன ஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சு,கடல்தொழில் அமைச்சு உள்ளிட்ட அமைச்சுகள் மீதான திருத்தங்கள், தெளிவுபடுத்தலின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதியின் சௌபாக்கிய கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் பசுமையான சுற்றுச் சூழலை உருவாக்க நாங்கள் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். இலங்கை சுற்றுச் சூழலை பாதுகாத்தவர்கள் இருந்த நாடாகும்.

வரலாற்றில் இது தொடர்பாக இருக்கின்றன. இவ்வாறான நாட்டில் இப்போது சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பாக கதைக்க வேண்டியுள்ளது. இப்போதுள்ள சந்ததி அது தொடர்பாக அக்கறை கொண்டுள்ளனரா என்று சிந்திக்க வேண்டியுள்ளது.

இந்நிலையில் சுற்றுச் சூழலை பாதுகாப்பதற்காக நாங்கள் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். இதில் மரம் வளர்த்தல் உள்ளிட்ட வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

இந்நிலையில் ஒரே நேரத்தில் பயன்படுத்தக் கூடிய பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்த வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.

சுற்றுச்சூழலுக்கு பாதிப்பான செசே பக்கற்றுகளை தடை செய்துள்ளோம். அந்தப் பக்கற்றுகளால் பாரிய பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. அவை சூழலில் 100 வருடங்களானாலும் அழிவடையாது. இதன்படி 18 வகையான பொலித்தீன்களுக்கு தடைவிதித்துள்ளோம்.

அதேபோன்று உக்காத லஞ்சீட் பாவனையையும் கட்டுப்படுத்தியுள்ளோம். இதனை முற்றாக தடை செய்ய தேவையான வேலைத்திட்டத்தை முன்னெடுப்போம். இதற்காக சட்ட விதிகளை நாங்கள் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்போம்.

பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்களுக்கு பதிலான மாற்றுப் பொருட்களை அறிமுகப்படுத்தவும் நடவடிக்கை எடுப்போம். இதுவரையில் யாரும் அவதானம் செலுத்தாத விடயமாக பாவித்த பேனைகள் தொடர்பில் பிரச்சினைகள் உள்ளன.

பாடசாலைகள் மற்றும் அலுவலகங்களில் பெருமளவான பேனைகள் சூழலில் போடப்படுகின்றன. இது தொடர்பாக வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். அலுவலகங்களில் இதற்காக வேறான பெட்டிகளை பயன்படுத்தி அவற்றை பெற்று மீள் சுழற்சி செய்யவும், பாதுகாப்பான முறையில் அவற்றை அழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

குறிப்பாக பாடசாலைகளில் மாத்திரம் 90 முதல் 100 கிலோ வரையில் சுற்றுச் சூழலுக்குள் போடப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவை அழிவடைய 100 முதல் 400 வருடங்களாகும். இவை நிலத்திற்குள்ளேயே செல்லும். இதனால் பாடசாலைகளில் இது தொடர்பாக வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம் என்றார்.

## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்து; இதுவரை 13,832 மீனவர்களுக்கு இழப்பீடு

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தினால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 13,832 மீனவர்களுக்கு முதற்கட்டமாக இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.


கம்பஹா மாவட்டத்தில் 10,175 மீனவர்களுக்கும், கொழும்பில் 2,956 மீனவர்களுக்கும் மற்றும் களுத்துறையில் 701 மீனவர்களுக்கும் இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

அதேநேரம் 1,200 மீனவர்களுக்கு இன்னும் முதற்கட்ட இழப்பீடுத் தொகை வழங்கப்படவில்லை.

மேலும் 1,200 மீனவர்களுக்கு தகவல் உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

2022 ஆம் ஆண்டுக்கான கடற்றொழில் அமைச்சின் மீதான வரவு செலவுத் திட்ட விவாதத்தின் குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மீனவர்கள் 15,032 பேர் குறித்த கப்பல் தீ விபத்தினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



## நடைபாதையில் நின்றால் இழுத்துச் செல்வோம்

நடைபாதைகளில் தரிக்கப்பட்டிருக்கும் வாகனங்களை இழுத்துச் செல்லும் புதிய நடவடிக்கையொன்றை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

கொழும்பு மற்றும் ஏனைய பிரதான நகரங்களிலுள்ள நடைபாதைகளில் தரிக்கப்பட்டிருக்கும் வாகனங்களையே இவ்வாறு இழுத்துச் செல்ல நடவடிக்கை முன்னெடுத்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த நடவடிக்கை நேற்று புதன்கிழமை முதல் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

## ஓட்டமாவடியில் 3261 சடலங்கள் அடக்கம்

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக உயிரிழந்தவர்களில் ஓட்டமாவடியில் அடக்கம் செய்யப்பட்டுள்ள சடலங்களின் எண்ணிக்கை 3261 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக உயிரிழப்பவர்களது சடலங்கள் கிழக்கு மாகாணம் மட்டக்களப்பில் உள்ள ஓட்டமாவடியில் அடக்கம் செய்யப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் நேற்று முன்தினம் மேலும் ஒருவரின் சடலம் அங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து அங்கு இதுவரை அடக்கம் செய்யப்பட்டுள்ள கொவிட்-19 சடலங்களின் எண்ணிக்கை 3261 ஆக அதிகரித்துள்ளது.

## போலந்துக்கிடையிலான விமான சேவை மீள ஆரம்பம்

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் பின்னர் இடைநிறுத்தப்பட்டிருந்த இலங்கைக்கும் போலந்துக்கும் இடையிலான நேரடி விமான சேவைகள் நேற்று புதன்கிழமை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, போலந்துக்கும் இலங்கைக்கும் இடையிலான நேரடி விமான சேவை Lot Polish Airlines நேற்று முதல் ஆரம்பிக்கவுள்ளது.

அந்தவகையில் Lot Polish Airlines திங்கள், புதன் மற்றும் சனிக்கிழமைகளில் நாட்டிற்கு வரவுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிற்கும் இலங்கைக்கான போலந்து தூதுவர் பேராசிரியர் ஆடம் பரகூஸ்கிக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னரே நேரடி விமான சேவையை ஆரம்பிக்க தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## எதிர்க்கட்சியுடன் இணைந்து தமிழர் தரப்பும் வெளியேறும் என நினைத்தோம்

-கூறுகிறார் சி.பி. ரத்நாயக்க-



பிரதான எதிர்க்கட்சியுடன் இணைந்து தமிழர் தரப்பும் பாராளுமன்றத்தை புறக்கணிக்கும் என நாம் நினைத்தோம், ஆனால் உங்கள் மக்களின் பிரச்சினைகளை கலந்துரையாட நீங்கள் தயாராக இருந்தாலும் சஜித் பிரேமதாச உங்களை ஏற்றுகொள்ளவில்லை என்பதே அவர்களின் செயற்பாடுகள் மூலமாக வெளிப்பட்டுள்ளது.

எனினும் தமிழ் மக்களுக்காக கூட்டமைப்பு போராடுவதை நாம் வரவேற்கின்றோம் என அமைச்சர் சி.பி ரத்நாயக்க சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

ஏனைய நாடுகளை போன்றே எமது நாட்டிலும் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. எம்மை இந்தியாவுடன் ஒப்பிட முடியாது. இது சிறிய நாடு. இந்த நாட்டுக்குள் தான் நாம் எமது சகல செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டியுள்ளது.

நாட்டில் பல்வேறு பிரச்சினைகளுக்கு 3 தசாப்தகால யுத்தமே பிரதானமாக காரணம். இந்த யுத்தத்தில் வடக்கு கிழக்கை சேர்ந்த பலர் இடம்பெயர்ந்திருந்தனர். நாட்டை விட்டு வெளியேறினர், தமது வாழ்க்கையை பாதுகாத்துக்கொள்ள மக்கள் நாட்டை விட்டு வெளியேறினர். அதனை உருவாக்கிய சிலர் இன்று பாராளுமன்றத்திற்கு வந்து வேறு பல கதைகளை கூறுகின்றனர்.

வேறு இராஜ்ஜியம் உருவாக்குவதோ அல்லது அதற்கு சர்வதேசத்திற்கு துணைபோவது ஒரு பக்கம் இருக்கட்டும், நாட்டு மக்கள் இன மத பேதமின்றி வாழக்கூடிய சூழலை நாம் உருவாக்க வேண்டும்.

3 தசாப்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்த நிலையில் நாட்டை விட்டு வெளியேறிய தமிழ் மக்களை மீண்டும் நாட்டுக்கு வரவழைக்கும் தேசிய வேலைத்திட்டத்தை உருவாக்க வேண்டும். அதற்கு சகலரதும் ஒத்துழைப்பு அவசியம்.

பிரதான எதிர்க்கட்சியுடன் இணைந்து தமிழர் தரப்பும் பாராளுமன்றத்தை புறக்கணிக்கும் என நாம் நினைத்தோம், ஆனால் உங்கள் மக்களின் பிரச்சினைகளை கலந்துரையாட நீங்கள் தயாராக இருந்தாலும் சஜித் பிரேமதாச உங்களை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதே அவர்களின் செயற்பாடுகள் மூலமாக வெளிப்பட்டுள்ளது.

இதனை மாற்றி சகலருக்கும் வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். தமிழ் மக்களுக்காக நீங்கள் சபையில் குரல் எழுப்புவதை நாம் முழுமையாக ஆதரிக்கின்றோம். தீர்வுகளை பெற்றுக்கொடுக்க சகல நடவடிக்கையும் எடுப்போம்.

5 ஆண்டுகள் கால அவகாசத்தில் நாம் சகல பிரச்சினைகளையும் தீர்க்கவே நினைக்கின்றோம். எமக்கும் கால அவகாசம் தாருங்கள். நாட்டில் சகல தரப்பினருக்கும் ஒரே விதமாக சட்டம் செயற்பட வேண்டும் என்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடாகும் என்றார்.

## கொக்குவில் மேற்கு சன சமூக நிலையத்திற்கு புதிய நிர்வாக சபை

யாழ்.கொக்குவில் மேற்கு சன சமூக நிலையத்திற்கான புதிய நிர்வாக சபை அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபை சன சமூக அபிவிருத்தி உத்தியோகஸ்தரின் பங்குபற்றலுடன் நடைபெற்ற மேற்படி பொது சபைக் கூட்டத்தில் அதன் தலைவராக பொ.சந்திரநாதன் செயலாளராக பா.செந்தில்குமார், பொருளாளராக த.தயாபரன், உப தலைவராக பு.சயந்தன், உப செயலாளராக சி.சிறோயன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் உறுப்பினர்களாக செ.சோபிதன், பி.சூரியப்பிரகாஸ், ச.காந்தரூபன், ச.துவாரகன், ஆ.செல்வநாயகம், ஐ.கிரிங்கநடனம், ந.காண்டீபன், செ.கலைமகள், அ.அச்சுதராஜா, சோ.சுதர்சினி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## 100,000 இளைஞர், யுவதிகளுக்கு வேலை



க.பொ.த சாதாரண தரத்தைப் பூர்த்தி செய்த ஒரு இலட்சம் மாணவர்களுக்கான ஆட்சேர்ப்பு வேலைத்திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சமுர்த்தி, நுண் நிதி, சுயதொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே செஹான் சேமசிங்க இதை தெரிவித்தார். மேலும் குறிப்பிடுகையில்:-

2015 - 2019 காலப்பகுதியில் அரச சேவைக்கு வழங்கப்பட்ட மொத்த வேலை வாய்ப்புகளின் எண்ணிக்கை 22,145 ஆகும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த பின்னர் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு மாத்திரம் 60,000 பட்டதாரி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், க.பொ.த சாதாரண தரம் வரை படித்த அல்லது க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சித்தியடையாத 100,000 இளைஞர், யுவதிகளை இணைத்துக்கொள்ளும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## கணவனின் கழுத்தை வெட்டிய மனைவி

நவகமுவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ரணால பகுதியிலுள்ள வீடொன்றில் கணவன் மனைவிக்கிடையில் ஏற்பட்ட தகராறில் கணவன் கத்திக் குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குடித்துவிட்டு வந்து மனைவியுடன் தகராறு செய்த கணவன், மனைவியின் தலையில் தேங்காய் ஒன்றால் அடித்துள்ளார்.

இதனால் கோபமடைந்த மனைவி, கையில் வைத்திருந்த கத்தியால் கணவரின் கழுத்தில் தாக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவத்தில் காயமடைந்த இருவரும் அயலவர்களால் நவகமுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

பின்னர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவரது கணவர் உயிரிழந்துள்ளார். 50 வயதுடைய மொரகெட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த தம்பதியினர் கடந்த இரண்டு மாதங்களாக மொரகெட்டிய பிரதேசத்தில் உள்ள வாடகை விடுதி ஒன்றில் வசித்து வந்ததாகவும், இதுவரை சட்டப்படி திருமணம் செய்து கொள்ளவில்லை எனவும் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சிறுவர் இல்லத்திலிருந்து ஐந்து சிறுமிகள் மாயம்

வத்தேகம - மீகம்மன பிரதேசத்தில் உள்ள சிறுவர் இல்லத்தில் இருந்து ஐந்து சிறுமிகள் காணாமல் போயுள்ள சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இந்த சிறுமிகள் சிறுவர் இல்லத்திற்கு அருகிலுள்ள கல்வி நிலையத்திற்கு கல்வி கற்க சென்ற நிலையில், காணாமல் போயுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

காணாமல் போனவர்களில் ஒருவர் நாவலப்பிட்டியில் உள்ள அவரது வீட்டில் இருப்பதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும், அவரை வத்தேகம பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வருமாறு பாதுகாவலருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மற்ற நான்கு சிறுமிகளும் 16 -18 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். இந்த சம்பவத்தில் நேற்று முன்தினம் மதியம் வரை சிறுமிகள் தொடர்பில் எந்த தகவலையும் கண்டுபிடிக்க முடியவில்லை எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## காட்டு யானை தாக்கி இருவர் பலி



ஹம்பாந்தோட்டை சூரியவெவ பகுதியில் காட்டு யானை தாக்கியதில் இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர்கள் சூரியவெவ மீகஹஜந்துர பகுதியில் வசிக்கும் 39 மற்றும் 43 வயதுடையவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

காட்டு யானைகள் அடிக்கடி அச்சுறுத்தும் பிரதேசம் இதுவாகும். சூரியவெவ பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பேரறிவாளன் விடயத்தில் ஆளுநர் காலம் தாழ்த்துவதை ஏற்க முடியாது

## -உச்சநீதிமன்றம் உத்தரவு-

பேரறிவாளன் வழக்கில் ஆளுநரின் முடிவு என்ன என்று உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

அத்துடன் பேரறிவாளன் வழக்கு தொடர்பான ஆவணங்கள் தொடர்பில் முடிவெடுக்காது.ஆளுநர் காலம் தாழ்த்தியதை எந்த வகையிலும் ஏற்க முடியாதெனவும் உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அதாவது முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தன் மீதான குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்பதால் தன்னை வழக்கிலிருந்து விடுவிக்குமாறு கோரி பேரறிவாளன் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இதன் மீதான விசாரணை நீதிபதிகள் நாகேஸ்வர ராவ், பி.ஆர். கவாய் மற்றும் பி.வி.நாகரத்னா ஆகியோர் தலைமையில் நடைபெற்ற போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.



இவ்வழக்கில், மத்திய அரசின் சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா,வழக்கை வேறு திகதிக்கு ஒத்திவைக்குமாறு கோரினார். இவ்வாறான நிலையிலேயே நீதிபதிகள், நீண்ட நாட்களாக பேரறிவாளன் விவகாரத்தில் எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை எனவும், பேரறிவாளன் வழக்கு தொடர்பான ஆவணங்கள் தொடர்பில் முடிவெடுக்காமல், ஆளுநர் காலம் தாழ்த்தியதை எந்த வகையிலும் ஏற்க முடியாதெனவும் தெரிவித்தனர்.

மேலும் மாநில அரசின் தீர்மானத்தின் மீது ஆளுநர் முடிவு எடுக்க வேண்டுமென குறிப்பிட்ட நீதிபதிகள் மீண்டும் இவ்வழக்கை ஒத்திவைக்க கோரக்கூடாதென்றும் தெரிவித்தனர்.

இந்த விவகாரம் இழுத்தடிக்கப்படுவதால், இறுதி முடிவு வரும் வரை பேரறிவாளனுக்கு பிணை வழங்க வேண்டும் என அவரது வழக்கறிஞர் கோரினார். இதனை பரிசீலிப்பதாக கூறிய நீதிபதிகள், பேரறிவாளன் விவகாரத்தில் ஆவணங்களின் நிலைவரம் என்ன என்பது தொடர்பாக காலம் தாழ்த்தாமல் முடிவெடுத்து நீதிமன்றத்தில் தெரிவிக்க வேண்டும் என உத்தரவிட்டு வழக்கு மீதான விசாரணையை ஜனவரி மாதத்துக்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

# பா.ஜ.க.வை தோற்கடிப்பதற்கு மெகா கூட்டணி அமைக்கப்படும்

## -தேசியவாத காங்கிரஸ் தெரிவிப்பு



பாரதிய ஜனதா கட்சியை 2024 இல் தோற்கடிப்பதற்கு மிகப்பெரிய அளவில் எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து கூட்டணியை உருவாக்கும் செயற்பாட்டில் தேசியவாத காங்கிரஸ் ஈடுபட்டுள்ளதாக அதன் ஊடகப் பேச்சாளர் நவாப் மாலிக் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற தேர்தலில் இரண்டு முறை அடுத்தடுத்து வெற்றி பெற்று பாரதிய ஜனதா கட்சி ஆட்சியை பிடித்துள்ளது. பிரதமர் மோடி தலைமையிலான வலிமையோடு உள்ள அரசாங்கத்தை காங்கிரஸ் தலைமையிலான எதிர்க்கட்சிகளால் எதிர்க்க முடியாத நிலை உள்ளது.

இந்த நிலையில் மம்தா பானர்ஜி, பாரதீய ஜனதாவிற்கு எதிராக மிகப்பெரிய அளவில் எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து அதனை எதிர்க்க தேசியவாத காங்கிரஸ் முடிவு செய்துள்ளது.

இந்நிலையில் கோவா உள்ளிட்ட மாநிலங்களில் பாரதீய ஜனதாவை எதிர்த்து போட்டியிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரத்தில் மகாராஷ்டிரா சென்றிருந்த மம்தா பானர்ஜி சரத் பவார் மற்றும் உத்தவ் தாக்கரே மகன் ஆதித்யா தாக்கரே ஆகியோரை சந்தித்து பேசியிருந்தார்.

இந்த நிலையில் தேசியவாத காங்கிரஸ் கட்சியின் ஊடகப் பேச்சாளர் நவாப் மாலிக், 2024இல் பாரதீய ஜனதாவை எதிர்க்க மிகப்பெரிய எதிர்க்கட்சிகளின் கூட்டினை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மக்கள் மாற்றத்தை விரும்புவதால் கூட்டணி அமைக்கப்பட்டால் 2024-ல் மாற்றம் ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பாதுகாப்பு சிறப்பு அதிகார சட்டத்தை திரும்பப் பெறுமாறு மத்தியிடம் நாகலாந்து கோரிக்கை

நாகலாந்தில் அமுல்படுத்தியுள்ள ஆயுதப் பாதுகாப்பு சிறப்பு அதிகாரச் சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தி மத்திய அரசுக்கு கடிதம் எழுதப்படுமென அம்மாநில அமைச்சரவையில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

நாகலாந்து மாநிலத்தில் சனிக்கிழமை இரவு பொதுமக்கள் சென்ற வாகனத்தின் மீது தீவிரவாதிகள் எனத் தவறாக நினைத்து இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். இந்த சம்பவத்தில் 13 பேர் பலியாகியுள்ளனர். இதையடுத்து நடைபெற்ற வன்முறையில், பொதுமக்கள் தரப்பிலிருந்து மேலும் ஒருவரும், இராணுவ வீரரொருவரும்; பலியாகியுள்ளனர்.

இந்த சம்பவத்தையடுத்து நாகலாந்து அமைச்சரவை கூடியது. இதன் போது துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்து விசாரிக்க பொலிஸ்மா அதிபர் தலைமையிலான 5 பேர் கொண்ட சிறப்பு விசாரணைக் குழு உள்ளிட்ட மத்திய அரசின் நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இதில் மத்திய அரசின் விசாரணைக் குழுவின் அறிக்கையை ஒரு மாதத்திற்குள் தாக்கல் செய்ய வேண்டுமென்றும் நாகலாந்தில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஆயுதப் பாதுகாப்பு சிறப்பு அதிகாரச் சட்டத்தை திரும்பப் பெறக் கோரி மத்திய அரசிற்கு கடிதம் எழுதுவதெனவும் தீர்மானிக்கப்பட்டதாக நாகலாந்து அமைச்சரவை பேச்சாளர் நெய்பா குரோனு தெரிவித்துள்ளார்.


## சிறுவிளம்பரங்கள்

### மணமகன் தேவை

1984, யாழ். கிறிஸ்தவ நளவர், சதயம், Bank, யாழ்ப்பாணம். பதிவு #6544. புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு. மற்றும் திருமணம் சரி வரும் போது தரகர் கூலி இல்லை. Appointments 076 6649 401. www.EQMarriage Service.com, Ensured Quality Lanka Pvt Ltd., No.91 - 4/2, Galle Road, Bamabalapity, Colombo - 04.

### வேலைவாய்ப்பு

வவுனியாவில் இயங்கிவரும் பிரபல ஐஸ் கிறீம் கடை ஒன்றிற்கு ஆண் வேலையாட்கள் தேவை. 20 - 45 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். தொடர்புகளுக்கு - 077 3788746


# சூகிக்கு சிறைத் தண்டனை விதிப்புக்கு இந்தியா கண்டனம்

மியன்மாரில் ஆட்சியில் இருந்து நீக்கப்பட்ட ஆங் சாங் சூகிக்கு 4 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டமைக்கு இந்தியா தனது கண்டனத்தை தெரிவித்துள்ளது.

இது குறித்து இந்திய வெளியுறவுத் துறை அமைச்சின் ஊடகப் பேச்சாளர் தெரிவிக்கையில்,

ஆங்சா சூகிக்கு எதிராக அண்மையில் வெளியிடப்பட்டுள்ள தீர்ப்புகள் மிகவும் கவலையளிப்பதாக உள்ளது.

அண்டை நாடு என்ற முறையில் மியன்மார் ஜனநாயகப் பாதைக்கு திரும்புவதை இந்தியா பெரிதும் விரும்புகின்றது.

மியன்மாரில் சட்டத்தின் ஆட்சியும் ஜனநாயக மாண்பும் பாதுகாக்கப்பட வேண்டும். அவற்றை குலைக்கும் எந்த நடவடிக்கையும் மிகவும் கவலைக்குரியது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மியன்மாரில் கடந்த ஆண்டு நவம்பரில் நடைபெற்ற தேர்தலில் முறைகேடுகள் நடைபெற்றதாகக்கூறி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை இராணுவம் கலைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2021.12.07
சீட்டிழுப்பு இல: 3747
வர்ணம்: இளநீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.5,092,520/-
வெற்றி இலக்கங்கள் 09 16 30 75 W
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
திகதி : 2021-12-07
வெற்றி வாரம் : 3298
வர்ணம் : சிவப்பு
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,196,835/-
வெற்றி இலக்கங்கள் 12 36 54 62
மிதுனம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,156,100/-

ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள் Y 15 28 41 65
775
2021. 12. 07
இளஞ்சிவப்பு
செவ்வாய்க்கிழமை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,284,320/-
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 87,821,540/-

அத கோடிபதி
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1412
வர்ணம்: இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2021.12.07
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,100,240/-
வெற்றி இலக்கங்கள் 31 58 73 75 O
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1586
நிறம் இளநீலம்
சீட்டிழுப்பு திகதி 2021.12.07
தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் M 10 13 24 53
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,325,140/-



## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் தனியார் பாதுகாப்பு சேவை பெற்றுக்கொள்ளல் தொடர்பான கேள்வி கோரல் - 2022

1. வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த விலைக் கேள்விதாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட இடங்களிற்கு பாதுகாப்பு சேவையினை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
   கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி : 2021.12.09 - 2021.12.20 நண்பகல் 12.00 மணிவரை
   கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 2021.12.23 பி.ப 14.00 மணி வரை
   கேள்வி திறக்கும் திகதி : 2021.12.23 பி.ப 14.30 மணி
2. கேள்வி கோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.
3. விலைக் கேள்விதாரர் வலிதான வியாபார பதிவினை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கறுப்புப் பட்டியலில் இடம்பெறாமல் இருத்தல் வேண்டும்.
4. கேள்விதாரர் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்த நிலையான தொலைபேசி தொடர்பிலக்கத்துடன் கூடிய ஒரு பதிவுக் காரியாலயத்தையோ அல்லது கிளைக் காரியாலயத்தையோ கொண்டிருத்தல் வேண்டும். அவசியமேற்படுமிடத்து குறித்த முகவரி நேரில் பரிசீலிக்கப்படும். மேலும் சேவை வழங்குநர் தெரிவில் இவ்விடயம் முக்கியமாக கருத்திற்கொள்ளப்படும்.
5. தகுதிவாய்ந்த விலைக் கேள்விதாரர் விலைக் கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பக் கடிதத்தினை சமர்ப்பித்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரத்தில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரை மீளளிக்கமுடியாத கேள்வி படிவக்கட்டணமாக ரூபா 2,500.00 இனையும், மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணமாக ரூபா 10,000.00 இனையும் பணமாகச் செலுத்துவதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும், மூலப்படிவம் கொண்ட தபாலுறையில் மூலப்பிரதி எனவும் இணைப்படிவத்தில் இணைப்பிரதி எனவும் எழுதப்பட்டு இணைப்பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கும் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். (பதிவுத்தபால் முடிவுத்திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறவேண்டும்) அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். பிந்திய விலைக் கேள்வி விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
7. கேள்வி திறக்கப்படும் போது கேள்வியாளரோ அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியோ சமுகமளிக்க முடியும்.
8. கேள்வி கோரல் விண்ணப்பங்கள் யாவும் கேள்வி கோரல் மூடியதனைத் தொடர்ந்து கேள்விதாரர்கள், கேள்விதாரர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்
9. இக்கேள்வி அறிவித்தல் தொடர்பாக வலிகாமம் மேற்கு பிரதேசசபை பெறுகைக்குழுவால் எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.
10. மேலதிக விபரங்களை அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| பெறுகை இலக்கம் | சேவை விபரம் | தேவைப்படும் ஆளணி எண்ணிக்கை | | சேவை தேவைப்படும் காலம் |
|---|---|---|---|---|
| | | இரவு | பகல் | |
| NP/14/41(17)/02/PC/01 | பாதுகாப்புச் சேவை | 05 | 02 | 2022.01.01 - 2022.12.31 |

2021.12.09

த.நடனேந்திரன்
உள்ளூராட்சி பெறுகைக்குழு,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.

# ஒமிக்ரோனிலிருந்து தடுப்பூசிகள் மூலம் பாதுகாப்பு பெற முடியும்

## - உலக சுகாதார அமைப்பு தெரிவிப்பு-



தற்போது பாவனையில் உள்ள கொவிட் தடுப்பூசிகளால் ஒமிக்ரோன் புதிய திரிபு தொற்றுக்கு எதிராகப் பாதுகாப்பளிக்க முடியும் என நம்புவதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

புதிய திரிபு தொடர்பாக தென்னாப்பிரிக்காவில் முன்னெடுக்கப்பட்ட முதல் ஆய்வக சோதனை முடிவுகளின் பிரகாரம் பைசர் தடுப்பூசி இந்தத் திரிபின் ஆபத்திலிருந்து ஓரளவு பாதுகாப்பளிக்கிறது எனத் தெரிய வந்துள்ளது என உலக சுகாதார அமைப்பின் அவசரகால திட்ட நிர்வாக பணிப்பாளர் டாக்டர் மைக் ரியான் கூறியுள்ளார்.

ஒமிக்ரோன் திரிபு தொற்று நோயாளர்களுக்கு தற்போது பாவனையில் உள்ள தடுப்பூசிகள் பாதுகாப்பளிக்காது என்பதற்கு எந்த அறிகுறியும் இல்லை என அவர் கூறினார்.

எங்களிடம் மிகவும் பயனுள்ள தடுப்பூசிகள் உள்ளன. அவை கடுமையான நோய் வாய்ப்படல் மற்றும் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுதல் ஆகிய ஆபத்துக்களில் இருந்து தவிர்க்க உதவுகின்றன.

டெல்டா மற்றும் பிற திரிபுகளை விட ஒமிக்ரோன் தொற்றுக்குள்ளானோர் அதிக நோய் அறிகுறிகளை ஏற்படுத்தவில்லை என்பதை ஆரம்பகட்ட ஆய்வு முடிவுகள் காட்டுகின்றன எனவும் மைக் ரியான் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, அசல் கொவிட் வைரஸை விட ஒமிக்ரோனுக்கு எதிராக பைசர் /பயோஎன்டெக் தடுப்பூசியானது 40 மடங்கு குறைவான செயல்திறன் கொண்டதாக இருக்கலாம் என புதிய தென்னாப்பிரிக்க ஆய்வு முடிவு தெரிவிக்கிறது.

தடுப்பூசி நோயெதிர்ப்பு திறனில் இருந்து முழுமையாக ஒமிக்ரோன் திரிபு தப்பிக்கொள்ளும் என்ற வாதம் ஏற்புடையதல்ல என இந்த ஆராய்ச்சிக்கு தலைமை தாங்கிய ஆப்பிரிக்க சுகாதார ஆராய்ச்சி நிறுவனத்தின் பேராசிரியர் அலெக்ஸ் சிகல் கூறினார்.

தடுப்பூசிகள் ஒமிக்ரோன் திரிபுக்கு எதிராக இன்னும் பாதுகாப்பளிக்கின்றன. பூஸ்டர்கள் குறிப்பிடத்தக்க பலனைத் தரக்கூடும் என்பதையும் ஆய்வில் அறியக்கூடியதாக இருந்தது எனவும் பேராசிரியர் அலெக்ஸ் சிகல் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஒமிக்ரோன் திரிபுக்கு எதிராக தடுப்பூசிகள் எந்தளவு பாதுகாப்பளிக்கிறது? என்பது தொடர்பில் மேலதிக ஆய்வுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது குறித்த மேலதிக தகவல்கள் எதிர்வரும் நாட்களில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# புருண்டி சிறைச்சாலையில் தீ விபத்து; 38 கைதிகள் பலி



கிழக்கு மத்திய ஆப்பிரிக்க நாடான புருண்டியின் தலைநகர் கிடேகாவில் உள்ள பிரதான சிறைச்சாலையில் செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி குறைந்தது 38 கைதிகள் உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் 60-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என நாட்டின் துணை ஜனாதிபதி ப்ரோஸ்பெர் பஸூம்பன்ஸா தெரிவித்தார்.

400 பேர் மட்டுமே தங்கக் கூடிய இந்தச் சிறையில் அளவுக்கு அதிகமாக 1,500 -க்கும் மேற்பட்ட கைதிகள் அடைத்துவைக்கப்பட்டிருந்ததால் அதிக உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதாக புருண்டி ஊடகங்கள் குற்றம் சாட்டியுள்ளன.

எனினும் தீ விபத்துக்கான காரணம் என்ன? என்பது குறித்து பருண்டி துணை ஜனாதிபதி ப்ரோஸ்பெர் பஸூம்பன்ஸா கருத்து வெளியிடவில்லை.


கிடேகாவில் உள்ள பிரதான சிறைச்சாலையில் கடந்த ஆகஸ்ட் மாதமும் தீ விபத்து ஏற்பட்டது. எனினும் இதில் உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை. மின் கசிவு காரணமாக இந்த விபத்துஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# ரஷ்ய அலுவலகத்தில் மர்மநபர் துப்பாக்கிச்சூடு; இரண்டு பேர் பலி

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் உள்ள அரசு பொது சேவை அலுவலகத்தில் புகுந்து மர்ம நபர் ஒருவர் திடீரென துப்பாக்கிச்சூடு நடத்தினார். உள்ளூர் நேரப்படி பிற்பகல் மூன்று மணிக்கு பொதுமக்கள் மீது நடத்திய இந்த திடீர் தாக்குதலில் 2 பேர் உயிரிழந்தனர். மேலும் பத்து வயது சிறுமி உட்பட நான்கு பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.


பொலிசார் குற்றவாளியை பிடித்து விசாரித்ததில் அவர் மொஸ்கோவில் வசிக்கும் 45 வயதுடையவர் என தெரியவந்துள்ளது. அவர் மனநலம் பாதிக்கப்பட்டவரா எனபது குறித்து பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர். குற்றவாளியின் அடையாளம் மற்றும் துப்பாக்கிச்சூடு நடத்தியதற்கான காரணத்தை பொலிசார் வெளியிடவில்லை.

ரஷ்யாவில் பொதுமக்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்படுவது அரிதான ஒன்று ஆகும். அங்கு நவம்பர் 2020 இல், மொஸ்கோவின் தெற்கே வோரோனேஜ் நகருக்கு அருகிலுள்ள ஒரு இராணுவ தளத்தில் 20 வயதான சிப்பாய் ஒருவர் மூன்று சக இராணுவ வீரர்களைக் கொன்றது குறிப்பிடத்தக்கது



# இங்கிலாந்தில் வேகமாக பரவும் ஒமிக்ரோன் திரிபு

## -ஒரே நாளில் 101 பேருக்கு தொற்று உறுதி-




இங்கிலாந்தில் செவ்வாய்க்கிழமை ஒரே நாளில் மட்டும் 101 பேர் ஒமிக்ரோன் புதிய கொரோனா திரிபு தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதன் மூலம் இங்கிலாந்தில் ஒமிக்ரோன் திரிபு தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 43% ஆக உயர்ந்துள்ளது.

இதனைவிட இங்கிலாந்தில் செவ்வாய்க்கிழமை ஒரே நாளில் புதிதாக 45,691 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டதாக அந்நாட்டு சுகாதாரத்துறை தெரிவித்தது. அத்துடன் இங்கிலாந்தில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 15 இலட்சத்து 60 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

இதேவேளை, ஒமிக்ரோன் புதிய திரிபு வைரஸ் டெல்டாவை விட வேகமாக பரவும் தன்மை கொண்டது என இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் அதிக கவனத்துடன் பாதுகாப்பாக இருக்கும்படி மருத்துவ வல்லுனர்களும் விஞ்ஞானிகளும் வலியுறுத்தியுள்ளனர்.

அதேநேரம் ஒமிக்ரோன் வேகமாகப் பரவக் கூடியது என்றாலும் அது கடுமையான விளைவுகளை ஏற்படுத்தாது என அமெரிக்காவின் சிரேஷ்ட தொற்று நோய் நிபுணர் அந்தோனி பாசி தெரிவித்துள்ளார்.

ஒமிக்ரோனால் மருத்துவமனை சேர்க்கை அதிகரிக்கும். ஆனால் இறப்புகள் அதிகமாக இருக்காது எனவும் அவா் கூறியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை புறக்கணிக்க அவுஸ்திரேலியாவும் முடிவு

அமெரிக்காவைத் தொடர்ந்து சீனாவில் நடைபெறவுள்ள பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை இராஜதந்திர ரீதியில் புறக்கணிக்க உள்ளதாக அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

சீனா - அவுஸ்திரேலிய ராஜதந்திர உறவுகள் ஏற்கனவே சீர்கெட்டுள்ள நிலையில் இந்த அறிவிப்பு இரு தரப்பு உறவுகளை மேலும் மோசமடையச் செய்யும் எனக் கருதப்படுகிறது.

சீனாவில் உய்குர் முஸ்லிம்கள் மீதான மனித உரிமை மீறல்களை கண்டிக்கும் வகையில் இராஜதந்திர ரீதியாக இந்தப் போட்டிகளில் பங்கேற்காது புறக்கணிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக வெள்ளை மாளிகை திங்கட்கிழமை அறிவித்த நிலையில் இதனை அவுஸ்திரேலியாவும் வலியுறுத்தியுள்ளது.




அத்துடன், அவுஸ்திரேலியாவின் பாதுகாப்பு முயற்சிகளை சீனா கடுமையாக விமர்சித்து வருகிறது. அதிலும் குறிப்பாக அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்களைப் பெறுவதற்கான எங்கள் முடிவை சீனா சாடியுள்ளது என இந்தப் புறகணிப்புக்கான காரணங்களை அவுஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மொரிசன் வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, தங்கள் நாட்டு அரசு அதிகாரிகளை சீனாவில் நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்கு அனுப்பப் போவதில்லை என்று நியூசிலாந்து அரசு தரப்பிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று நோய் மற்றும் அமெரிக்காவின் முடிவை மேற்கோள் காட்டி நியூசிலாந்து அரசு இந்த முடிவை எடுத்துள்ளது.

இதேவேளை, கனடா,ஜப்பான் மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளும் அமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்தின் இந்த முடிவு குறித்து பரிசீலித்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# 3 குழந்தைகளை பெற்றுக்கொள்ளும் தம்பதிகளுக்கு பல்வேறு சலுகைகள்

## -பிறப்பு வீதத்தை அதிகரிக்க சீனா நடவடிக்கை-



சீனாவில் பிறப்பு வீதத்தை அதிகரிக்கும் நோக்குடன் 3 குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளும் தம்பதிகளுக்கு விசேட சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தம்பதிகள் 3 குழந்தைகளை பெற்றுக்கொள்ள ஊக்குவிக்கும் விதமாக அவர்களுக்கு மானியங்கள், வரிக்குறைப்பு உள்ளிட்ட சலுகைகளை மாகாண அரசுகள் அறிவிக்க தொடங்கியுள்ளன.

உலகிலேயே அதிக மக்கள் தொகையை கொண்டுள்ள சீனாவில் பிறப்பு விகிதம் சரிந்ததை அடுத்து இந்த ஊக்குவிப்புக்கள் அறிவிக்கப்படுகின்றன.

சீனாவில் பத்தாண்டுகளுக்கு ஒருமுறை வெளியிடப்படும் மக்கள் தொகை கணக்கெடுப்பு விவரம் கடந்த மே 11ஆம் திகதி வெளியிடப்பட்டது. இதில், கடந்த 1950 -க்குப் பிறகு மக்கள் தொகை வளர்ச்சி கடந்த பத்தாண்டில் மிகப்பெரிய சரிவை சந்தித்திருப்பது கண்டறியப்பட்டது.

சீனாவின் மொத்த மக்கள் தொகை 141.2 கோடியாகும். கடந்த 1976 முதல் 2016 வரை மக்கள் தொகையை கட்டுப்படுத்த சீனாவில் தம்பதியருக்கு ஒரு குழந்தை திட்டம் கடுமையாக கடைப்பிடிக்கப்பட்டது.

இதனால், பிறப்பு விகிதம் வெகுவாக குறைந்ததால் 2016 -இல் இரண்டு குழந்தை பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டது. ஆனாலும், இதற்கு பெரிய அளவில் வரவேற்பு இல்லை. இதன் காரணமாக, இளம் வயதினர் குறைந்து முதியவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பதால், சமூக, பொருளாதார, வேலைவாய்ப்பில் பல்வேறு எதிர்கால பிரச்சினைகளை சந்திக்க வேண்டிய அபாயம் ஏற்படும் என சீனா உணர்ந்தது.

இதைத் தொடர்ந்து, 2 குழந்தைகளுக்குப் பதிலாக 3 குழந்தைகளை பெற்றுக் கொள்ளலாம் என சீன அரசு கடந்த மே மாதம் அறிவித்தது. இது சீனாவின் மிகப்பெரிய கொள்கை மாற்றமாகும்.

இப்புதிய திட்டத்தை அமல்படுத்தும் வகையில் மக்கள் தொகை மற்றும் குடும்ப கட்டுப்பாடு சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டது. இந்நிலையில் சீன தம்பதிகள் 3 குழந்தைகளை பெற்றுக்கொள்ள ஊக்குவிக்கும் விதமாக அவர்களுக்கு மானியங்கள், வரிக்குறைப்பு உள்ளிட்ட சலுகைகளை மாகாண அரசுகள் அறிவிக்க தொடங்கியுள்ளன.

சீனாவில் 20-க்கும் மேற்பட்ட மாகாணங்களில் மகப்பேறு விடுப்பு, திருமண விடுமுறையை நீடித்தல் மற்றும் தாய்மார்களை கவனித்து கொள்ள ஆண்களுக்கு விடுமுறை அதிகரிப்பது போன்ற சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

# மலேசியா செல்வோருக்கு கொவிட் பரிசோதனை

சிங்கப்பூரில் இருந்து மலேசியா செல்வோர், தடுப்பூசிப் பயணத் தடத்தின் (Vaccinated Travel Lane - VTL மூலம் நாட்டுக்குள் நுழைவோருக்கான கொவிட் பரிசோதனைகளைக் கடுமையாக்கியிருக்கிறது.

நேற்றுமுதல்,வாகனங்கள், விமானம் மூலம் மலேசியா செல்லும் பயணிகள், அங்கு சென்றடைந்ததும் 6 நாள்களுக்குப் பரிசோதனை மேற்கொள்ளவேண்டும்.

லங்காவி அனைத்துலகச் சிறப்புப் பயண ஏற்பாடு, குறுகியகால வர்த்தகப் பயணிகளுக்கான சிறப்புப் பயண ஏற்பாடு ஆகியவற்றின்கீழ் மலேசியா செல்வோருக்கும் அது பொருந்தும்.

ஓமிக்ரான் ரகக் கிருமி மலேசியாவில் பரவுவதைத் தடுப்பதே புதிய நடவடிக்கைகளின் நோக்கம் என அந்நாட்டுச் சுகாதார அமைச்சர் கைரி ஜமாலுடின் தெரிவித்தார்.

# ஜமால் கஷோகி படுகொலை; சந்தேக நபர் பிரான்சில் கைது

சவுதி அரேபியாவில் பத்திரிகையாளர் ஜமால் கஷோகி கொலையுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் சவுதி அரேபிய நபர் ஒருவர் பிரான்சில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

செவ்வாய்க்கிழமை பாரிஸில் உள்ள சார்லஸ் டிகோல் விமான நிலையத்தில் காலித் ஏத் அலோடைபி என்ற சந்தேக நபரே கைதானார்.

கொலை தொடர்பாக துருக்கியால் தேடப்படும் 26 சவுதி அரேபியர்களில் இவரும் ஒருவர் என நம்பப்படுகிறது.

33 வயதான சவூதியின் முன்னாள் அரச காவலரான அலோடைபி, தனது சொந்த பெயரில் பிரானஸூக்கு பயணம் செய்தார். இதன்போதே கைது செய்யப்பட்ட அவர் தற்போது நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

சவுதி அரசாங்கத்தின் முக்கிய விமர்சகரான கஷோகி, அக்டோபர் 2018 இல் இஸ்தான்புல்லில் உள்ள சவுதி தூதரகத்தில் படுகொலை செய்யப்பட்டார். சவுதி இக்கொலையை மறுத்து வந்த நிலையில் இது குறித்த ஒலி மற்றும் ஒளிப்பதிவுகளை சான்றுகளாக துருக்கி வெளியிட்டது.

இந்நிலையில் இவரது கொலை தொடர்பில் 5 பேருக்கு கடந்த 2019 ஆம் ஆண்டு சவுதி நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது. பின்னர் அது 20 ஆண்டுகள் சிறைத்தண்டனையாக மாற்றப்பட்டது



இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 09 ஆம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.